பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

ராம்கோ
சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி 23 | சனிக்கிழமை | (05.06.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 169

# நிவாரணத்தில் மேலும் காலதாமதம்

# போராட்டம் நடக்குமென எச்சரிக்கை

## யாழ்.பொது அமைப்புக்களின் ஒன்றியம் கடிதம்

(யாழ்ப்பாணம்)

**உலர் உணவு நிவாரணம் வழங்குவதில் மேலும் காலதாமதம் காட்டப்படுமானால் யாழ்.செயலகம் முன்பாகத் தொடர் மறியலில் ஈடுபட நேரிடுமென யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் மீண்டும் எச்சரித்துள்ளது.**

இது தொடர்பாக யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் ப.கனகலிங்கம் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் ஆணையாளர் ஹரீம் பீரிஸுக்கு நேற்று அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தின் சுருக்கம் வருமாறு, ஏற்கனவே உலர் உணவு நிவாரணம் பெற்றுவந்த ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 482 குடும்பங்களுக்கு உடனடியாக உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். இல்லையேல் உலர் உணவு நிவாரணம் கிடைக்கும் வரை யாழ்.செயலகம் செயலிழக்கும் வகையில் அரச எதிர்ப்புப் போராட்டத்தை மக்கள் முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுமென்பதை வேதனையுடன் அறியத் தருகிறோம். மேலும் நிவாரணம் தொடர்பில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கை ஏற்றுக் கொள்ள முடியாதது.

போருக்குள் சிக்குண்டு மீள முடியாமல் அழிவின் விழிம்பில் பரிதவித்து நிற்கும் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணத்தை ஆட்சியாளர்கள் பறிக்க முற்படுவது மிகவும் ஒரு கொடிய செயலாகும். இதனை நாம்

(12ஆம் பக்கம் பார்க்க)



ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஊடகத்துறையில் குறிப்பாக பத்திரிகை உலகில் பணியாற்றி தமிழ்த் தேசியத்திற்கும், தமிழ் இனத்தின் எழுச்சிக்கும் மகத்தான சேவையாற்றிய கோபு என்று அழைக்கப்படும் எஸ்.எம்.கோபாலரத்தினம், தமிழீழ தேசியத் தலைவரால் விருது வழங்கி கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# அன்புச்சோலை தங்ககத்தை பிரபா திறந்து வைத்தார்

## மூதாளர்களுக்கு பரிசில்களும் அன்பளிப்பு

(கிளிநொச்சி)

அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட தங்ககத்தைத் தமிழீழத் தேசியத் தலைவர் திறந்து வைத்து மூதாளர்களுக்கு அன்புப் பரிசில்களையும் வழங்கினார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள மூதாளர் பேணலகத்தில் நேற்று நடைபெற்ற இந் நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பொதுச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றிவைக்க அதனைத் தொடர்ந்து புதிதாக உருவாக்கப்பட்ட பெண்களுக்கான தங்ககத்தை தமிழீழத் தேசியத் தலைவர் திறந்து வைத்தார். மாவீரர்கள், போராளிகள், குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தமிழீழத்

(12ஆம் பக்கம் பார்க்க)

# குடும்பத் தலைவன் வெறியாட்டம்

# குழந்தை தரையில் அடித்துக் கொலை

## வடமராட்சியில் கொடூரச் சம்பவம்

(பருத்தித்துறை)

பெற்ற குழந்தையை தரையில் அடித்துக் கொன்ற கொடூரம் நேற்று புலோலி வல்லிபுரக் குறிச்சியில் இடம் பெற்றுள்ளது.

குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக கோபமுற்ற இ.இராசதுரை(வயது33) என்பவரே இவ்வாறு பெற்ற குழந்தையை அடித்துக் கொன்றவர் ஆவார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; மேற்படி நபர் குடும்பத்துடன் அடிக்கடி முரண்பட்டு வந்தார். சம்பவ தினத்தன்று முரண்பாடு முற்றி கோபம் கொண்ட நிலையில் அகப்பட்ட தனது மூன்று வயதுக் குழந்தையை(ராஜ்குமார்) வாளால் வெட்டியதுடன் சிறிதும் இரக்கம் இன்றி குழந்தையைத் தூக்கித் தரையில் அடித்ததில் அந்த இடத்திலேயே குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது.

இந்தளவில் வெறிஅடங்காத நிலையில் கட்டிய மனைவியான ஜெயந்திமாலாவின் (வயது30) கையை வாளால் துண்டித்துப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# கழுத்து வெட்டப்பட்ட நிலையில் கரவெட்டியில் ஆணின் சடலம் மீட்பு

(புலோலி)

கழுத்துவெட்டி கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்ட நிலையில் நேற்றுக் காலை கரவெட்டிப் பகுதியில் ஆணின் சடலமொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் அது இரு பிள்ளைகளின் தந்தையும், மூத்த விநாயகர் ஆலயம் முன்பாக கூல்பார் வைத்திருப்பவருமான நவிண்டிலைச் சேர்ந்த ஜோன் சந்திரமோகன் (வயது25) என்ற இளம் குடும்பஸ்தருடையதெனத் தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் அறியப்படுவதாவது;

கைகள் பின்பக்கமாகக் கட்டப்பட்டு கழுத்திலும் முகத்திலும் பலமான வெட்டுக் காயங்களுக்குள்ளான நிலையில் கரவெட்டி இரும்பு மதவடிக்கு அருகாமையில் உள்ள மடமொன்றில் நேற்றுக் காலை 7 மணியளவில் மேற்படி சடலத்தைக் கண்ணுற்ற பொது மக்கள் உடனடியாக பருத்தித் துறைப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அரியநாயகம் மரண விசாரணைகளை மேற்

(12ஆம் பக்கம் பார்க்க)

# இ.தொ.கவின் கோரிக்கையை ஏற்க ஜனாதிபதி சந்திரிகா பின்னடிப்பு

## எனினும் அரசில் இணைய இ.தொ.க. உறுப்பினர்கள் ஆர்வம்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைவது பற்றி கடந்த வியாழனன்று இ.தொ.கா தலைவர் ஆறுமுகம் தொண்டமானிற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம் பெற்ற பேச்சுக்கள் தோலவியடைந்துள்ளதாக அரசின் பேச்சாளர் தெரிவித்தார். எவ்வாறாயினும் எதிர்வரும் 8ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் போது அதில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய நிலையில் அரசாங்கம் உள்ளது.

இருதரப்பினருக்கிடையேயும் இடம் பெற்ற பேச்சுக்களுக்கு அனுசரணையாளராக இருந்த துறைமுக, விமானத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தற்போது அனுசரணைப் பணியில் இருந்து விலகிக் கொண்டுள்ளார்.

மேற்படி சந்திப்பின் போது ஹேமசிறி பெர்ணான்டோவைச் செயலாளராகக் கொண்ட, பொது மக்கள் விமான சேவை அமைச்சையும், மலையகப் பெருந்தோட்டத் துறை, தோட்ட உட்கட்டமைப்பை உள்ளடக்கிய வீடமைப்பு அமைச்சையும் தமக்கு வழங்கும்படி ஆறுமுகம் தொண்டமான் கோரியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றைவிட நிறைவேற்று ஜனாதிபதி முறை விருப்பத் தேர்வு,

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஹெல உறுமய உறுப்பினர் பதவி ஏற்க நீதிமன்றம் தடை

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்[illegible]ள அக்மீமன தயாரத்தின தேரர், பாராளுமன்ற உறுப்பினராகச் சத்தியப் பிரமாணம் செய்வதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகிக் கொண்டதாகக் கூறப்பட்ட ஹத்தலுவே ரத்தன சீலதேரர் தாக்கல் செய்த மனுவை பரிசீலனை செய்த பின்னரே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அக்மீமன தயாரத்தின தேரரின் பெயரைத் தேர்தல் ஆணையாளர் வர்த்தமானி மூலம் வெளியிட்ட அறிவித்தலை ரத்துச் செய்யுமாறும் அம்மனுவில் கோரப்பட்டுள்ளது. (ச)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜனாதிபதி - இ.தொ.க. சந்திப்புக் குறித்து வெளியான செய்திகளில் உண்மையில்லை

## மறுக்கிறது ஜனாதிபதி செயலகம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவுக்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கும் இடையில் அண்மையில் சந்திப்பு இடம்பெற்றதாக வெளியான செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை என ஜனாதிபதி செயலகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

மேற்படி சந்திப்புக் குறிப்பு 'டெய்லிமிரர்' ஆங்கிலப்பத்திரிகையில் நேற்றும், நேற்று முன்திமும் செய்திகள் வெளியாகி இருந்தன. இவற்றில் எதுவித உண்மையும் இல்லையென ஜனாதிபதி செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் ஜனாதிபதிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கும் இடையிலான சந்திப்பு எதுவும் அண்மையில் ஒழுங்கு செய்யப்படவுமில்லை, சந்திப்பு நடைபெறவுமில்லை.

ஆயினும் கடந்த மாதம் ஆறுமுகம் தொண்டமானின் வேண்டுகோளுக்கு அமைவாக நுவரெலியாவில் வைத்து அவரை ஜனாதிபதி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது உண்மைதான்.

இந்தச் சந்திப்பின்போது தேர்தல் தொகுதியில் நிலவும் குறைபாடுகள் குறித்தே கலந்துரையாடப்பட்டதென ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (உ-18,60)

## கூட்டமைப்பு எம்.பி.க்கள் தமிழ்ச்செல்வன் சந்திப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுபபாளர் சு.ப.தமிழ்ச



செல்வனுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று இன்று இடம் பெறவுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள சமாதானச் செயலகத்தில் இன்று காலை 10.30 மணியளவில் இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.

தற்போதைய அரசியல் சூழ்நிலை மற்றும் சமாதான முன்னெடுப்புகள் குறித்த விடயங்கள் இச்சந்திப்பின் போது ஆராயப்படவுள்ளன. (உ-4,61)

# மாநகர சபை, யாழ்ப்பாணம்

# கேள்வி அறிவித்தல் - 2004

கீழ் குறிப்பிட்டுள்ள வீதி வேலைகளுக்கான கேள்விகள் "இக்ராட்" நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன. பதிவு செய்யப்படவேண்டிய தரம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி 21.06.2004 பி.ப 3.00 மணி.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 22.06.2004 ந.ப. 12.00 மணி.

கேள்வி திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 22.06.2004 பி.ப. 2.00 மணி.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரை இடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என முகவரி இடப்பட்டு கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும் அல்லது இதற்கென இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். கேள்விப்பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிட வேண்டும்.

மேலதிக விபரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | இக்ராட் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய ஆகக் குறைந்த தரம் | மீளளிக்கக் கூடிய வைப்புக் கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்ளிப் பத்திர கட்டணம் வற் உட்பட |
|---|---|---|---|
| 01. நாயன்மார்கட்டு வீதி | 08 | 10700/- | 500/- |
| 02. முருகமூர்த்தி வீதி | 09 | 5700/ | 500/- |
| 03. புங்கங் குளம் வீதி | 09 | 7300/- | 500/- |
| 04. சேர்துரைச்சாமி வீதி பெட்டி மதகு | 09 | 5700/- | 500/- |
| 05. அரச வீதி | 10 | 3000/- | 500/- |
| 06. பண்டாரக்குளம் வீதி | 10 | 2600/- | 500/- |
| 07. முதலியார் வீதி | 10 | 2300/- | 500/- |
| 08. பிரப்பம் குளம்வீதி | 10 | 3000/- | 500/- |
| 09. கற்பக விநாயகர்வீதி | 10 | 2700/- | 500/- |
| 10. ஆறுகால்மடம் பழம்வீதி பெட்டி மதகு | 10 | 3500/- | 500/- |
| 11. கந்தப்பசேகரம் வீதி பெட்டி மதகு | 10 | 4100/- | 500/- |
| 12. மணிக்கூட்டு வீதி ஒழுங்கை | 10 | 2900/- | 500/- |
| 13. பற்றிக்ஸ் வீதி | 10 | 3600/- | 500/- |
| 14. கோவில்வீதி ஒழுங்கை | 10 | 2500/- | 500/- |
| 15. கதிட்ரல் வீதி | 10 | 2200/- | 500/- |
| 16. அத்தியடி புதுவீதி | 10 | 1700/- | 500/- |
| 17. மணிக்கூட்டுவீதி | 10 | 1600/- | 500/- |
| | | 65100/- | 8500/- |

**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**
**03.06.2004**

**இ.இராமலிங்கம்,**
**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

(C/212)

## சிறுவிளம்பரங்கள்

### வரலாற்று ஆவணங்கள

கலாநிதி க.குணராசா-ஈழத்தவர் வரலாறு, The Jaffna Dynasty? மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம், முத்துத் தம்பிப் பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம், ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரம், மயில்வாகனப்புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை, 24 மணி நேரம் மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது. யாழ்ப்பாணக்கோட்டை வரலாறு- பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றன. கமலம் பதிப்பகம், 75/10A, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (8530)

### நாடக நூல்கள்

கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய i) யாழ்ப்பாணமா? கொழும்பா? ரூபா50/-, ii) எங்கள் நாடு ரூபா75/-, iii) வானொலி நாடகம் எழுதுவது எப்படி ரூபா 150/- 17 நாடகங்கள் கொண்டவை வாங்கிப் படியுங்கள், நடியுங்கள். (8548)

### கூட்டம்

(பொன்னாலை)

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையின் யாழ்.மாவட்டச் செயற்குழுக் கூட்டம் இன்று மு.ப. 10.00 மணிக்கு யாழ். கல்வி வலயம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பேரவையின் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (உ-49)

# புதிய தீர்வுத் திட்டத்தை புலிகள் முன்வைக்க வேண்டும்

## சமாதானத்திற்கான உலக முன்னணி

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக புதிய தீர்வுத் திட்டத்தினை தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்க வேண்டுமென இலங்கையின் சமாதானத்துக்கான உலக முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னைய தீர்வுத் திட்டமான, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் ஏற்றுக்கொள்ள முடியாததெனவும், இலங்கையின் இறைமையையும், பாதுகாபபையும் பாதிக்காதவகையிலான தீர்வுத் திட்டத்தினை மாத்திரமே தம்மால் ஏற்றுக் கொள்ள முடியுமெனவும் இவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையின் சமாதானத்துக்கான உலக முன்னணி என்ற பெயரிலான இந்த அமைப்பு உலகமெங்கும் பரந்து வாழும் இலங்கையர்களை உள்ளடக்கிய அமைப்பெனத் தனனை இனங்காட்டியுள்ளது. (உ)

# தடுப்புக் காவலில் இருந்தவர் சுருக்கிட்டு தற்கொலை

(கொழும்பு)

காலியில் பொலி ஸாரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் கழுத்தில் சுருக் கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கைக்குண்டினை வைத்திருந்ததாக கைது செய்யப்பட்டிருந்த இந்நபர், தனது நீளக் காற்சட்டையினை கழுத்தில் மாட்டியே தற்கொலை செய்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காலி, டன்கெதர என்னுமிடத்தைச் சேர்ந்த 39 வயதான புஸ்கொலவகே ஜெகத் நிசாந்த என்ற இந்நபர், தனது மனைவியை கொலை செய்து எாத்தமை மற்றும் கொள்ளைச சம்பவங்களுடனும் சம்பந்தப் பட்டிருந்ததாக ஒப்புக் கொண்டிருந்ததாகவும் தெரிய வருகின்றது.

இந்நிலையில் தனக்கெதிரான தண்டனைகள் கடுமையானவையாக இருக்கலாம் எனப் பயந்தே இவர் தற்கொலை செய்திருக்கலாமென காலி மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி நிஹால் கலன்சூரிய தெரிவித்துள்ளார். (உ)

**கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!**

**கடலை வந்தடையும் பிளாஸ்ரிக் கழிவுகளால் சுமார் 1 மில்லியன் கடற்பறவைகளும் 1 இலட்சம் கடற்பாலூட்டி விலங்குகளும் எண்ணுக்கணக்கில்லாத மீன்களும் ஆண்டுதோறும் பலியாகி வருகின்றன.**

# நோமண்டி கடற்கரை நோக்கி துருப்புக்கள் அடையாளப் பயணம்

(மோட்ஸ்மவுத் -இங்கிலாந்து)

நூற்றுக்கணக்கான இரண்டாம் உலகப் போரில் பங்கு பற்றிய இராணுவ வீரர்கள் நாளை பிரான்சின் நோமண்டி கடற்கரையில் நடை பெறவிருக்கும் 60வது நினைவு நிகழ்வில் கலந்து கொள்ளும் முகமாக கடற் பயணத்தின் மூலம் பிரான்ஸ் நோக்கி செல்கின்றனர்.



1944ஆம் ஆண்டு யூன் 6ஆம் திகதி அமெரிக்க ,இங்கிலாந்து மற்றும் கனடாவைச் சேர்ந்த 1,32, 500 பேர் விமானங்கள் மூலம் நோமண்டி கடற்கரையில் தரையிறக்கப்பட்டதன் அடையாளமாக இப்பயணம் அமைகிறது.

இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட பிரித்தானிய நாசகாரிக்கப்பலான எச்.எம் .எஸ். குளுசெஸ்டர் இப் பயணத்திற்கு தலைமைதாங்கிச் செல்லும். அதனைத் தொடர்ந்து இரண்டாம் உலகப் போரின் பங்கெடுத்த போர்க் கப்பல்களான பிரித்தானி பெரி எம்.வி.நோமண்டி மற்றும் பிரஞ்சுக் கப்பல்களான கஸாட் அமெரிக்காவின் றெஸ் மற்றும் எச்.எம்.சி.எஸ் என்பவற்றுடன் கனடாவின் சார்லட் ரவுண் கப்பலும் முறையே இங்கிலாந்தின் தென்பகுதியில் இருந்து கிளம்பி ஞாயிறுகாலை பிராஞ்சின் நோமன்டியில்பீகாசுஸ் துறைமுகத்தில் காலை 5.30க்கு நங்கூரம் மிடவுள்ளன. 1944யூன் 6ஆம் திகதி இதே நேரத்தில்தான் நேசதேசப் படைகள் இத் துறைமுகத்தில் தரையிறக்கப்பட்டன. (யே)

# எம்.எஸ்.எஃப் வைத்திய சேவை ஆப்கானில் இடை நிறுத்தம்

(பரிஸ்)

எம்.எஸ்.எ.ஃப் எனப்படும் பிரானஸ் நாட்டின் எல்லை கடந்த மருத்துவர்கள் தமது பணியை ஆப்கானிஸ்தானில் இடை நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளனர்.




கடந்த புதன்கிழமை இந்த அமைப்பைச் சேர்ந்த 5உறுப்பினர்கள் தலிபான்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டதன் எதிரொலியாகவே இவ் அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஒரு டச்சுக்காரர் ஒரு பெல்ஜியப் பெண் ஒரு நோர்வேக்காரர் இரண்டு ஆப்கானியர் உள்ளிட்ட 5உறுப்பினர்களே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

1979ஆம் ஆண்டு தொடக்கம் எம்.எஸ் எ.ஃப் நிறுவனம் ஆப்கானிஸ்தானின் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகள் மூலமாக அந்நாட்டு மக்களுக்கு வைத்திய உதவிகளை வழங்கி வருகிறது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முஹமட் கராஸி தலைமையிலான ஆப்கான் அரசு பொதுத் தேர்தலை நடாத்த விரும்புகிறது. இதனைத் தடுத்து நிறுத்துமுகமாக ஆப்கானிஸ்தானில் உள்ள வெளிநாட்டவர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் தொண்டர் நிறுவன ஊழியர்களை கொலை செய்யப்போவதாகத் தலிபான் அறிவித்த ஒருவாரத்தில் இக் கொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதுவரை 24 தொண்டர் நிறுவன ஊழியர்கள் ஆப்கானிஸ்தானில் கொல்லப்பட்டுள்ளனர். (யே)

# ஜோர்ஜ் புஷ்ஷுக்கு எதிராக இத்தாலியர் ஆர்ப்பாட்டம்

(ரோம்)

ஐரோப்பிய விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று இத்தாலிக்குச் சென்ற ஜோர்ஜ் புஷ்ஷிற்க்கு எதிராக ஆயிரக்காணக்கான இத்தாலியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



பாப்பரசர் அருளப்பர் சின்னப்பரைச் சந்திக்கச் சென்ற புஷ்ஷை ஆர்ப்பாட்டக்காரர்கள் வழிமறித்தனர். ஈராக்கில் அமெரிக்காவின் தலையீட்டையும் ,அதற்கு ஆதரவுதெரிவிக்கும்இத்தாலியப் பிரதமர் சில் லியோ பெரலஸ் கோனியின் நிலைப்பாட்டையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கண்டனம் செய்தனர். ஈராக் யுத்தத்தை கடுமையாக எதிர்த்த பரிசுத்த பாப்பரசரை நேற்று மாலை ஜனாதிபதி புஷ் சந்திக்கவிருந்தார்.


1944ஆம் ஆண்டு யூன் மாதம் 4ஆம் திகதி ஹிட்லரின் நாஸிப் படைகளையும் இத்தாலிய சர்வாதிகாரி முஸோலினியின் பாஸிசப் படைகளையும் விரட்டி அடித்து அமெரிக்கப்படைகள் ரோம் நகரைக் கைப்பற்றிய நினைவு நிகழ்ச்சிகளிலும் புஷ் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரான்சுக்குப் பயணமாகும் புஷ், பிரஞ்சு ஜனாதிபதி ஜக்சிராக் ஜேமன் அதிபர் ஜெரால்ட் ஸ்ரூரோல்டர் ஆகியோரை சந்திப்பார். நாளை பிரான்சின் ரோமன் டீ கடற் கரையில் இரண்டாம் உலகப் போரின் போது நேசதேசப்படைகள் தரையிறக்கப்பட்ட 60வது ஆண்டு நிறைவு நிகழ்விலும் கலந்து கொள்வார். (யே)

# இரண்டாவது பத்திரிகையாளரும் அடையாளம் காணப்பட்டார்

(பக்தாத்)

இம் மாதம் 27 ஆம் திகதி ஆயுததாரிகளின் தாக்குதலில் கொலை செய்யப்பட்ட ஜப்பானியப் பத்திரிகையளரில் இரண்டாமவரும் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டார். 61 வயதான ஷின்சுகே ஹஷிடாவே அடையாளம் காணப்பட்ட பத்திரிகையாளராவார். இவருடன் பயணம் செய்து கொலை செய்யப்பட்ட மற்றொரு பத்திரிகையாளர் கொட்டாரோ ஒகாவா ஏற்கனவே அடையாளம் காணபபட்டிருநதார். ஆனால் ஹஷிடாவின் முகம் கடுமையாகச் சிதைவடைந்திருந்தமையால் விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தல்கள் மூலம் குவெய்ற்றில் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டது.



இவருடன் சேர்ந்து இதுவரை இரண்டு ஜப்பானிய ராஜதநதிரிகள் உள்ளடங்கலாக நான்கு ஜப்பானியர்கள் ஈராக்கில் உயிரிழந்துள்ளனர். ஈராக்கில் ஜப்பானியப் படைகள் மனிதநேயப் பணிகளில் மாத்திரமே ஈடுபட்டு வருகின்றன. ஆயினும் அவர்கள் வெளியேற வேண்டுமென்று ஆயுததாரிகள் கோரி வருகின்றனர். (யே)




# சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் உப தலைவருக்குச் சிறை!

(சியோல்)

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் உபதலைவர் கிம் யுன் யங்கிற்கு தென் கொரிய நீதிமன்றம் ஒன்று லஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் பேரில் இரண்டரை வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.



மேலும் 6.72மில்லியன் டொலர்களை அபராதமாகவும் செலுத்தும்படி தீர்ப்பு வழங்கப்பட்டது. ஒருவாரத்தினுள் அவர் மேன்முறையீடு செய்ய முடியுமாயினும் அது பற்றி பல்தரப்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

3.3பில்லியன் டொலர்களை அவர் இலஞ்சமாகப் பெற்தோடு 7 மில்லியன் டொலர்களை வர்த்தக மற்றும் விளையாட்டு நிறுவனங்களிடமிருந்து அன்பளிப்பு என்னும் போர்வையில் இலஞ்ச மாகப் பெற்றதும் நிரூபிக்கப்பட்டது.

ஆயினும் ரேக்வெண்டோஎனப்படும் கொரிய விளையாட்டை ஒலிம்பிக்கில் இடம்பெற வைத்தது, 1988ல் சியோலில் ஒலிம்பிக் போட்டிகளை ஏற்பாடு செய்தது போன்ற சேவைகளைக் கருத்தில் கொண்டு அவரது தண்டனை குறைவாகவே வழங்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (யே)

# அவுஸ்திரேலியப் பிரதமரின் எதிராளியைச் சாடிய புஷ்

(வாஷிங்டன்)

அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோண் ஹவார்டை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டிப் பேசிய அமெரிக்க ஜனாதிபதி புஷ் அவரது எதிராளியும் தொழிற் கட்சியின் முக்கிய பிரமுகருமான மார்க்லறத்தைக்கடுமையாக விமர்சனம் செய்தார்.


ஜோண் ஹவார்ட்

அவுஸ்தீரேலியாவில் நடைபெறவிருக்கும் தேர்தலில் தான வெற்றி பெற்றால் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்னதாக ஈராக்கிலிருக்கும் 850 அவுஸ்திரேலிய வீரர்களையும் நாட்டுக்குத்திருப்பி அழைக்கப் போவதாக லதம் அறிவித்திருந்தார். ஒருவேளை அவர் வெற்றி பெற்றுப் படைகளைத் திருப்பி அழைப்பாரேயானால் அது மிக அநியாயமான செயலாக இருக்கும். அப்பேற்பட்ட ஒருவர் வெற்றிபெறத் தான் வேண்டுமா என்றுபுஷ் கேள்வி எழுப்பினார்.


ஈராக்கில் ஜனநாயகமும் அமைதி வாழ்வும் திரும்புவதில் பிரதமர் ஹவார்ட் அர்ப்பணிப்போடு செயற்படுகிறார்.அவரது பணி மகத்தானது அவருக்கு நான் வாழ்த்துக் கூறுகிறேன் என்று புஷ் தெரிவித்தார். (யே)

# சி.ஐ.ஏ. இயக்குநர் பதவியிலிருந்து ஜோர்ஜ் ரெனற் இராஜிநாமா!

(வாஷிங்டன்)

சுமார்7வருடகாலமாக அமெரிக்காவின் சி.ஐ.ஏ உளவுநிறுவனத்தின் இயக்குநராக விளங்கிவந்த ஜோர்ஜ் ரெனற் தனது பதவியை இராஜிநாமாச் செய்தார்.

2001செப்ரம்பர்11 தாக்குதல் தொடக்கம் ஈராக் விவகாரங்களில் சி.ஐ.ஏ.யின் உலகத்தகவல்கள் பற்றிக் கடுமையான விமர்சனங்களுக்கு ஆளாகியிருந்த ரெனற் தனது பதவியை நேற்று முன்தினம் இராஜிநாமாச் செய்தார். அவுஸ்திரேலிய பிரதமருடனான சந்திப்பை அடுத்துச் செய்தியாளர்களை சந்தித்த ஜனாதிபதி புஷ் ,ரெனற்றின் இராஜிநாமாவை அறிவித்தார்.



பயங்கர வாதத்திற்கெதிராகவும் நாட்டுக்காகவும் மிகத் துணிவுடன் பணியாற்றியவர் ரெனற் எனவும் மிகத் திறமைவாய்ந்த ஒருவரின் பணியை நாடு இழக்கிறது என்று புஷ் வெகுவாகப் புகழ்ந்துரைத்தார்.மிகுந்த கவலையோடு,ஆயினும் எனது தலையை உயர்த்தியபடி நான் இப்பணியை நிறைவுசெய்கிறோன் என்று ரெனற் அறிவித்தார்.

அவரது இராஜிநாமா அமெரிக்கா முழுவதும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனால் இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட இவர் கொசோவோ , ஆப்கானிஸ்தான்,அல்கெய்டா, ஈராக் விவகாரங்களில் அமெரிக்காவை வழிநடத்தியவர் ஆவார் .யூலை11ம் திகதி தனது பணிவாழ்வின் ஏழு வருடங்களைப் பூர்த்தி செய்யும் இவர் அன்றுடன் பதவி விலகுவார்.இவரது இடத்திற்கு துணை இயக்குநரான ஜோன் மாக்லா .'. மலின் நியமிக்கப்பட்டுள்ளார். (யே)

# சபாநாயகர் பதவிக்கு சோமநாத் சட்டர்ஜி எதிர் வேட்பு மனுக்கள் எதுவும் இல்லை

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரான சோமநாத் சட்டர்ஜி மக்களவைச் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படுவது உறுதியாகிவிட்டது.

இப் பதவிக்கான வேட்பு மனுத் தாக்கல் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியுடன் முடிவடைந்த போது, சோமநாத் சட்டர்ஜிக்கு ஆதரவாகப் பல்வேறு கட்சிகள் சார்பில் 18 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

சோமநாத் சட்டர்ஜியைத் தவிர வேறுயாரையும் வேட்பாளராக முன்மொழிந்து வேட்பு மனு தாக்கல் செய்யப்படவில்லை.

மக்களவைச் சபாநாயகராக சோமநாத் சட்டர்ஜியை ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்க ஒத்துழைக்க வேண்டுமென்று காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி, தேசிய ஜனநாயகக் கூட்டணியிடம் கோரிக்கை விடுத்தது.

அதற்குப் பதில் மக்களவை துணைச் சபாநாயகர் பதவிக்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி தனது வேட்பாளரை நிறுத்தலாமென்று காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி யோசனை தெரிவித்திருந்தது.

இதையடுத்து, தேசிய ஜனநாயகக் கூட்டணியும் சோமநாத் சட்டர்ஜியை ஆதரிகக முடிவெடுத்ததாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சோமநாத் சட்டர்ஜிக்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்திருப்பது மகிழ்ச்சியிளிக்கிறது என்று நாடாளுமன்ற நடவடிக்கைத்துறை அமைச்சர் குலாம் நபி ஆஸாத். செய்தியாளர்களிடம் கூறினார்.

தேர்தல் சமயத்தில் உறுப்பினர்கள் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை வீசிய போதிலும் இப்போது காணப்படும் இந்த ஒற்றுமைதான் ஜனநாயக உயிரோட்டத்தின் உண்மையான அடையாளமென்று அவர் கூறினார். (து)

# ராகுல் காந்தியின் பதவிப் பிரமாணம்

அமேதி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் வேட்பாளர் ராகுல் காந்தி பதவிப்



பிரமாணம் எடுத்துக் கொண்ட போது காங்கிரஸ் உறுப்பினர்கள் கரவொலி எழுப்பி மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

பதவிப் பிரமாணம் எடுத்தும் அவர் தனது தாயார் சோனியா காந்தி அமர்ந்திருந்த இருக்கைக்கு அருகே வந்து கைகூப்பி வணங்கிய பின் அவரது இருக்கைக்குச் சென்றார்.

இப் பதவியேற்பு நிகழ்ச்சியை அவரது சகோதரி பிரியங்கா காந்தியும் பார்வையாளர் மாடத்திலிருந்து கவனித்தார்.

பின்னர் வெயியே செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த பிரியங்காகாந்தி, தமது தாயாரும் சகோதரரும் மக்களவையில் இடம் பெற்றிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது என்றார்.

தமது தந்தையார் ராஜீவ் காந்தி உறுப்பினராக இருந்த அவையில், இவர்களும் இடம் பெறுவது பெருமிதமளிக்கிறது என்று குறிப்பிட்டார். (து)

# தமிழக ஆளுநர் மாற்றப்படுவாரா? பதிலளிக்க மத்திய அமைச்சர் மறுப்பு

(சென்னை)

தமிழக ஆளுநர் ராம் மோகன் ராவ் மாற்றப்படுவாரா என்பது குறித்துக் கருத்துத் தெரிவிக்கச் சென்னை வந்திருந்த மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் மறுத்துவிட்டார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு பிறந்த நாள் வாழ்த்துக் கூற வந்த அவரிடம் செய்தியாளர்கள் இது பற்றிக் கேட்டார்கள்.

அநுபவமும் ஆற்றலும் மிக்க தலைவரின் பிறந்த நாளில், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கவே தாம் வந்திருப்பதாகவும் ஆளுநர் மாற்றம் பற்றி இச் சந்திப்பில் எதுவும் தெரிவிக்க விரும்பவில்லையென்றும் சிவராஜ் பட்டேல் கூறினார். (து)



கருணாநிதியின் 81ஆவது பிறந்த நாள் விழாவில் (இடமிருந்து) வை.கோ., க.அன்பழகன், வி.பி. சிங், சிவராஜ் பட்டேல், ச.ராமதாஸ், ஜி.கே.வாசன், என். வரதராஜன், ஆர். நல்லக்கண்ணு ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஊழல்பேர்வழிகளுக்கு அமைச்சர் பதவி குடியரசுத் தலைவரிடம் பா.ஜ.க. புகார்

ஊழல் மற்றும் குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டு சிறைத் தண்டனை அல்லது குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டவர்கள் மத்திய அமைச்சரவையில் சேர்க்கப்பட்டிருப்பது தொடர்பாக தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவர்கள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமைச் சந்தித்து மனுவொன்றைக் கையளித்தார்கள்.

இதன் பின், செய்தியாளர்களிடம் பேசிய கூட்டணியின் செய்தித் தொடர்பாளர் அருண் ஜெட்லி இத்தகைய குற்றச்சாட்டுகளுக்குள்ளாகியிருக்கும் அமைச்சர்களை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று குடியரசுத் தலைவரிடம் வலியுறுத்தியிருப்பதாகக் கூறினார்.

குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருககும் அமைச்சர்களின் பெயர்களையும் அவர் வாசித்துக் காட்டினார். இந்தப் பிரச்சினையில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கட்சிகள் இரட்டை வேடம் போடுகின்றன என்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஆனந்த சர்மா கூறினார்.

நீதி மன்றத்தால் தண்டிக்கப்பட்டால் மட்டுமே குற்றவாளி என்று கருதலாமென்று பா.ஜ.க.ஆட்சியிலிருந்த போது அதன் தலைவர்கள் கூறியிருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்றுள்ள பா.ஜ.க.உறுப்பினர்கள் 49 பேர் மீது கிரிமினல் வழக்குகள் பல்வேறு மாநிலங்களிலும் உள்ளன எனக் கூறி அந்தப் பட்டியலை ஆனந்த சர்மா வாசித்தார். (து)

## இந்தியச் செய்திகள்

# புதிய அரசின் நிதிநிலை அறிக்கை

2004 -2005 ஆம் ஆண்டுக்கான மத்திய நிதிநிலை அறிக்கை அடுத்த மாதம் முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மும்பையில் செய்தியாளர்களிடம் இதைத் தெரிவித்த மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் நிதி நிலை அறிக்கை தாக்கலாகும் திகதி மக்களவைத் தலைவர் மற்றும் பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் ஆகியோருடன் கலந்து பேசிய பின் முடிவு செய்யப்படுமென்றார்.

ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் நிதிநிலை அறிக்கை நிறைவேற்றப்பட்டுவிடும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். முன்னதாகச் செய்தியாளர்களின கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், பொருளாதாரச் சீர்திருத்தங்கள் தொடரும் என்று கூறினார்.

மும்பையில் இரண்டு நாட்கள் தங்கியிருந்து பங்குச்சந்தைத் தரகர்கள், வங்கியாளர்கள், முதலீட்டாளர்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், பங்கு பரிவர்த் தனை வாரிய நிர்வாகிகளுடன் பேசிய பின் செய்தியாளர் கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். (து)

# கருணாநிதியின் 81ஆவது பிறந்த நாள் தமிழ் நாடே விழாக்கோலம் பூண்டது

தி.மு.க.தலைவர் கருணாநிதியின் 81 ஆவது பிறந்த நாள் ஜனநாயக முறபோக்குக் கூட்டணியின் வெற்றி விழாவாகத் தமிழ் நாட்டில் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது.

அவரது பிறந்த நாளையொட்டித் தலைவர்கள் பலரும் அவருக்கு வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மன்மோகன்சிங், முன்னாள் பிரதமர் வாஜபாய், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி, முன்னாள் மத்திய அமைச்சர் திருநாவுக்கரசர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தேசிய செயலாளர் சி.ராஜா ஆகியோர் கருணாநிதிக்குத் தொலை பேசி மூலம் வாழ்த்துத் தெரிவித்தனர்.

மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல், முன்னாள் பிரதமர் வி.பி.சிங், மத்திய அமைச்சர்கள் அன்புமணி ராமதாஸ், ஆர். வேலு, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஜி.கே.வாசன், ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வை.கோ., பா.ம.க.நிறுவுனர் டாக்டர் ராமதாஸ், அக் கட்சியின் தலைவர் ஜி.கே.மணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் ஆர். நல்லக்கண்ணு, மார்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலர் என்.வரதராஜன் ஆகியோர் கருணாநிதியை நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

தி.மு.க. வைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள், கட்சி நிர்வாகிகள், கட்சித் தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் திரளாக வந்து கருணாநிதிக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

முன்னதாக, தி.மு.க. தலைவர்



கருணாநிதி, தி.மு.க. நிறுவுநரும் தமிழக முன்னாள் முதலமைச்சருமான அமரா அண்ணாவின் நினைவிடத்துக்குச் சென்று மலரஞ்சலி செலுத்தினார்.

திராவிட கழக நிறுவுநர் தந்தை பெரியாரின் நினைவிடத்திலும் அவர் மலரஞ்சலி செலுத்தினார். (து)

# கார் மீது லொறி மோதியதில் முன்னாள் தி.மு.க.அமைச்சர் மனைவி உட்பட 2 பேர் பலி

கரூர் அருகே நேற்று முன்தினம் சொகுசு காரும் லொறியும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் முன்னாள் தி.மு.க. அமைச்சரின் மனைவி உள்பட 2 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

முன்னாள் தி.மு.க. அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமியின் மனைவியும் முன்னாள் தி.மு.க மாவட்ட செயலாளருமான விஜய லட்சுமி தனது சொந்த ஊரிலிருந்து உறவினர் ஒருவரின் இல்லத் திருமண விழாவிற்குச் சென்ற காரே விபத்துக்குள்ளானது.

கார் கரூர் அருகே தாராபுரம் வீதியில் உள்ள குளத்தூர் பட்டியை நெருங்கியபோது கரூரிலிருந்து கேரளாவிற்கு சிமெண்ட் ஏற்றிக்கொண்டு சென்ற லொறி முன் சென்ற லொறியைக் கடக்க முற்பட்ட போது கார் மீது லொறி நேருக்கு நேர் மோதியது.

இச்சம்பவத்தில் முன்னாள் தி.மு.க. அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமியின் மனைவி மற்றும் அவரது தங்கை மகன் ஆகியோர் உடல் நசுங்கி உயிரிழந்தனர்.(து)

# பறிமுதல் செய்த நகை, பணத்தை திருப்பித்தர ராதிகா செல்வி மனு

(சென்னை)

தமது கணவரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 60 பவுன் நகைகள், ரூபா ஒரு இலட்சம், 4 செல்போன்கள் ஆகியவற்றைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு கோரி திருச்செந்தூர் மக்களவைத் தொகுதியில் வெற்றிபெற்றுள்ள ராதிகா செல்வி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2003 - இல் சென்னையில் காவல்துறையினரால் ராதிகா செல்வியின் கணவரான வெங்கடேச பண்ணையார் சுட்டுக்கொல்லப்பட்டார். அப்போது அவரிடமிருந்து நகை[illegible]ம், செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அண்மையில் நடந்த மக்களவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் திருச்செந்தூர் தொகுதியில் ராதிகா செல்வி போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

பதவியேற்பு மற்றும் மக்களவைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக ராதிகா செல்வி டில்லி சென்றுள்ளார்.

அவரது சார்பில் எழும்பூர் 14 ஆவது பெருநகர மாஜிஸ்திரேட் கோர்ட்டில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. இது குறித்து பதிலளிக்குமாறு காவல்துறைக்கு மாஜிஸ்திரேட் கோவிந்தராஜ் உத்தரவிட்டுள்ளார். (து)

# சுயநிதிக் கல்லூரி கட்டணத்தை குறைப்பாரா? ஜெயலலிதாவிடம் ராமதாஸ் கேள்வி

(சென்னை)


வீதிகளில் நிறுத்தப்படும் வாகனங்களின் கட்டணங்களைக் குறைப்பதில் அக்கறை காட்டும் தமிழக முதலமைச்சர், சுயநிதி பொறியியல் கல்லூரிகளின் கட்டணத்தைக் குறைப் பதற்கு அக்கறை செலுத்தாதது ஏன் என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

அண்ணா பல்கலைக்கழகம் நடத்திய நுழைவுத் தேர்வு அடிப்படையில் ஏற்கெனவே நிரப்பப்பட்ட இடங்கள் போக, எஞ்சிய ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இடங்களுக்கும் அதே தேர்வு அடிப்படையிலேயே மாணவர்களைச் சேர்க்காமல், மற்றுமொரு குழுவை அவசரமாக அமைத்துள்ளது தமிழ் நாட்டு மாணவர்கள் நலனைப் பாதிக்குமென்றும், கிராமப்புற ஏழை, எளிய மாணவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்றும் சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் ராமதாஸ் கூறியிருக்கிறார். (து)

# வலுவிழந்தோர் வாழ்வில் ஜெய்ப்பூரின் சேவைகள்

யாழ்.ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டம் என்ற பெயருடன் யுத்த அனர்த்தங்களினால் பாதிப்படைந்தோருக்கு புனர்வாழ்வு அளிக்கும் மனிதாபிமான திட்டம், 1987 ஆம் ஆண்டு யாழ்.மண்ணில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் 2004 ஆம் ஆண்டில் 17வது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து, எமது சமுதாயத்திலுள்ள அங்கக் குறைபாடுள்ளோர், யுத்த வன்முறைகள், மிதி வெடிகள் ஆகியவற்றினால் அவயங்களை இழந்தோர் மற்றும் நோய்த் தாக்கங்கள, விபத்துக்கள் ஆகிய காரணங்களால் அவயவங்களை இழந்த அனைவருக்கும் புதுவாழ்வு அளிக்கும் ஒரு பாரிய செயற்திட்டமாக யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் என்ற பெயருடன் இன்று இயங்கி வருகின்றது. மூன்றாம் உலக நாட்டு மக்களுக்கேற்ற குறைந்த செலவிலான சேவையை தமது தருமப் பணியாக செய்துவரும் இத் திட்டத்தின் நோக்கம் அனைவராலும் போற்றக் கூடியது . இவர்களின் சேவை தொடர்பாக நாம் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் முகாமைத்துவ தலைவியும் கௌரவ செயற்திட்டப்பணிப்பாளருமான திருமதி தி.யோகநாதனை நேரில் சென்று, இது சம்பந்தமாகக் பல விடயங்களை கேட்டபோது அவர் எமது பத்திரிகை நிறுவனத்திற்கு அளித்த செவ்வியினை இங்கு உங்களுக்காக தருகின்றோம்.

**கேள்வி: யாழ். குடாநாட்டில் ஜெய்ப்பூர் பாதத்தின் ஆரம்**



இயன்மருத்துவப் பிரிவில் சிறுமி ஒருத்தி இயன் மருத்துவப் பயிற்சி பெறும் காட்சி.

**பகாலத் தடம் பதிப்புப் பற்றிக் கூற முடியுமா?**

**பதில்:** இங்கையிற செயற்படுத்தப்படும் ஜெய்ப்பூர் பாதத்திட்ட முறையானது எமது நாட்டிலுள்ள உடலூனமுற்ற மக்களுக்கு மறுவாழ்வளிக்கும் வண்ணம் கொழும்பு தேவைக்குதவும் நண்பர்கள் சங்கத்தினால் (Colombo Friend in Need Society) மேற்கொள்ளப்பட்ட ஒரு தனித்துவம் வாய்ந்த திட்டமாகும் .இத் திட்டத்தினை செயறபடுத்த முன்னதாக எமது நாட்டிலுள்ள ஊனமுற்ற, வசதிகுறைந்த மக்கள் செயற்கை உறுப்பைப் பெறுவதற்கு அரசாங்க மருத்துவ மனையில் பதிவு செய்துவிட்டு சக்கர நாற்காலியிலும் ஊன்றுகோலகளுடனும் நடமாடினா. இதனைத் தவிர்ப்பதற்கே முதன் முதலில் வட இந்தியாவில் உள்ள ஜெய்ப்பூர் என்னும் இடத்தில சாவான் மான்சிங் மருத்துவ மனையைச் சேர்ந்த அறுவை வைத்திய நிபுணர்



செவ்வியளித்தவர் :

**திருமதி தி.யோகநாதன்**

முகாமைத்துவ தலைவியும்,
கௌரவ செயற்திட்டப் பணிப்பாளரும்,
யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்.

பேராசிரியர் பிரமொட்கரன் செத்தி அவர்களால் "ஜெய்ப்பூர் பாதம்'' கண்டு பிடிக்கப்பட்டது. இலங்கையில் 1985 ஓகஸ்ட் மாதம் முதன் முதலாகப் பூரணமான ஜெய்ப்பூர் உறுப்பு தயாரிக்கப்பட்டு ஒரு வீதி விபத்தில் பாதிக்கப்பட்ட சிறிலால் சிறிகுமர என்னும் இளைஞனுக்குப் பொருத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து வலுவிழந்தோர் பலர்(எமது பயனாளிகள்) இதன் பயனைப் பெற்று மிகவும் தன்னிறைவுடன் இச் சமூகத்தில் நடமாடிவருகின்றனர்.யாழ்ப்பாண அன்னையர் முன்னணியினரும் யாழ்ப்பாணப் பொதுமக்களும் 1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06 திகதியன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றிற்கு முன்னாள கொழும்பு தேவைக்குதவும் நண்பர்கள் சங்கத்தின் செயலாளராகிய திருமதி. ஸ்வர்னா பர்டினன்ட் அழைக்கப்பட்டிருந்தார்.இவர் எம் திட்டத்திற்கு தம் ஒத்துழைப்பையும், உச்ச ஆதரவையும் தந்துதவுவதாகவும் உறுதியளித்தார்.இதன் பிரகாரமே 1987ஆம் ஆண்டு யூலை மாதம் கொழும்பு தேவைக்குதவும் நண்பாகள் சங்கத்தின் உதவியுடன் யாழ்ப்பாணக்கிளையை உததியோக பூாவமாக

**செவ்வி கண்டவர்**
**சசிரஜனி புலேந்திரன்**

சுண்டுக்குளியில் திறந்து வைக்கப்பட்டது.

**கேள்வி:- யாழ் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் பணிகள் பற்றி சுருக்கமாகக் கூற முடியுமா?**

**பதில்:** எங்கள் திட்டமானது உடல் ஊனமுற்றவர்களின் ஆக்க நலனுக்குப் பரிந்து செயலாற்றுவதாலும் சேவையே அதன் உயர்ந்த இலட்சியமாகக் கொண்டுள்ளமையினாலும் உலகளாவிய ரீதியில் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இன்று பங்களாதேஷ், தாய்லாந்து, லாவோஸ, இந்தோனேசியா,மலேசியா, மெச்சிக்கோ, ஐக்கிய நாடுகள் , ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம்,தன்சானியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள் வரை எமது பணி கால்பதித்துள்ளது. அந்த வகையில் செயற்கை அவயவங்களைப் பொருத்தும் சேவையில் கால்கள், கைகள், சார்புற்றுக்களைப் பொருத்துதல் இவற்றைவிட வலுவிலந்தோர் பாவிக்கும் கலிப்பர்கள்,முச்சக்கர வண்டிகள் சக்கர நாற்காலிகள்,கைஊன்று கோல்கள், முழங்கை ஊன்று கோல்கள்,பாத இணைப்புப் பட்டிகள்,உருக்கு நடைதாங்கிகள்,வெள்ளைப் பிரம்புகள் சப்பாத்து உயர்த்தி கொடுத்தல் போன்றவற்றை நாமே சிறந்த தொழில் நுட்பவியலாளர்களை வைத்து தயாரித்து இலவசமாய் கொடுத்து வருகின்றோம்.இவற்றைவிட நாம் மேலும் இப்பாதிப்புக்கு உள்ளான எமது பயனாளிகளுக்கு சுழற்சி முறைக் கடனுதவி, மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் ,உளவள சேவை, தங்குமிடம், உணவு வசதிகள் என்பவற்றை செய்து கொடுத்தல் போன்றவை எமது பணிகளாகக் காணப்படுகின்றன.

**கேள்வி: உங்கள் திட்டத்திற்கு உதவி புரிந்து வரும் நாடுகள் எவை எனக் கூறுங்கள்?**

**பதில்:** எமது சேவைகளைக் விஸ்தரித்து முன்னெடுத்துச் செல்லவென நோராட், யு.எஸ.எயிட். நிறுவனங்களும் ஏனைய நிதி வழங்குனரான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்,வை.எம்.சி .ஏ. சர்வதேச றோட்டரிக்கழம் என்பனவுடன் உளளூர், வெளியூர், தனிநபர்கள், நிறுவனங்கள் அனைத்தும் தமது உதவிக்கரங்களை எமது திட்டத்திற்கு நீட்டி வருகின்றன.சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே எமக்குத் தேவையான யந்திர வசதிகள், மூலப் பொருட்கள்,தொழில் நுட்பப் பயிற்சி, நிபுணத்துவ சேவ்வ என்பவற்றை இந்த ஸ்தாபனமே வழங்கி வருகின்றது.இத் திட்டத்திற்கு இவ் வுதவி புரியும் இங்கிலாந்தின் மிகப் பிரபல்யமான (Motivation Charitable Trust) மோட்டி வேஷன் தர்ம அறக்கட்டளை தமது இலங்கைக் கிளையினூடாக எம்முடன் ஒரு கூட்டு அடிப்படையல் எமது ஸ்தாபனத்திற்கு நிதி வசதி, மேலதிக தொழில்நுட்ப பயிற்சி, எமது தொழில் நுட்பவியலாளர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சி, நிபுணர்களின் சேவை ஆகியவற்றை வழங்கிவருவதோடு மட்டுமல்லாமல் எமது ஸ்தாபனத்தின் எதிர்கால வளர்ச்சி, வலு விழந்தோர் வாழ்க்கை மேம்பாடு ஆகியவற்றுக்கு வளமான ஆலோசனைகளையும், உதவிகளையும் வாரிவழங்கி வருகின்றது. யு.எஸ்.எயிட் நிறுவனம் எமக்கு வழங்கிவரும் நிதி உதவி இப்போது மோட்டிவேஷன் மூலமே இன்று கிடைக்கிறது. தனிநபர்கள் தமது சேவையை எமக்கு தரும் நோக்கில் நடனம், நாடகம், ஆக்கத்திறன் போட்டிகள், கண்காட்சிகள், விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றை நடாத்தி அதன் மூலம் வரும் பணத்தினை எமக்கு தந்துதவி வருகின்றனர்.

**கேள்வி: செயற்கை அவயவங்கள் சார்புறுப்புக்கள் மற்றும் துணைச் சாதனங்கள் தயாரிப்புக்கும் உங்கள்**



சுயதொழிலில் ஈடுபடும் பயனாளிகள் சிலர்.

**தொழில் நுட்பம் பற்றி சற்றுக் கூறமுடியுமா?**

**பதில் :** ஜெய்ப்பூர் செயற்கை அவயவங்களைத் தயாரிப்பதற்கு நாம் பொலிபுறோலைலினை (ஒரு வகை பிளாஸ்ரிக்) மூலப் பொருளாய்க்கொண்டு தயாரித்து வருகிறோம். தேவையான யந்திர வசதிகள், மூலப்பொருட்கள் தொழில் நுட்ப பயிற்சி,நிபுனத்துவ சேவை ஆகியவற்றையும் செஞ்சிலுவைச் சங்கத்தினரே ஏற்[illegible]தித்தந்துள்ளனர்.செயற்கை அவயவங்களை உற்பத்தி செய்யும் மூலப்பொருளை நாம் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் கொழும்பில் இருந்து பெற்றுக் கொள்கின்றோம் .இதன் மூலம் தரமான செயற்கை அவயவங்களை உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.இவற்றைவிட ஏனைய துணைச் சாதனங்களையும் சிறந்த தொழில் நுட்ப வியலாளர்களைப் பயன்படுத்தி செய்து வருகின்றோம். சிறப்பாக இங்கு உற்பத்தி செய்யப்படும் செயற்கைக் கால் பற்றிக் கூறின், பார்வைக்கு மட்டுமன்றி, (08ஆம் பக்கம் பார்க்க)

**1987ஆம் ஆண்டு முதல் 2003ஆம்ஆண்டு வரையில் நடைபெற்ற வேலைகளின் புள்ளிவிபரத் தகவல்கள்**

| | | |
|---|---|---|
| **செயற்கை அவயவங்கள் பொருத்தும் பகுதி** | | |
| முழங்காலுக்கு கீழ்ப்பாகம் - | | 3121 |
| முழங்காலுக்கு மேல்பாகம் - | | 171 |
| பாதம் - | | 2261 |
| பட்டிகள் - | | 5951 |
| செய்யப்பட்ட திருத்த வேலைகள் - | | 8965 |
| **சார்புறுப்புப் பொருத்தும் பகுதி** | | |
| கலிப்பர் - | | 126 |
| பாத இணைப்புப் பட்டி - | | 33 |
| சிறப்புப்பட்டி - | | 214 |
| சிலும்புகள் (ஸ்பிளின்ற்) - | | 44 |
| சப்பாத்து உயர்த்திக்கொடுத்தல் - | | 229 |
| **துணைக்கருவிகள் தயாரிக்கும் பகுதி** | | |
| முச்சக்கர வண்டி - | | 381 |
| நாற்காலிகள் - | 138 | |
| கை ஊன்றுகோல்கள் - | | 436 |
| முழங்கை ஊன்றுகோல்கள் - | | 1963 |
| உருக்கு நடைதாங்கிகள் - | 68 | |
| ஏனையவகை - | 23 | |
| பெறம்புலேற்றர் - | 02 | |
| பயிற்சிக்கான சைக்கிள்கள் - | | 03 |
| வெள்ளைப் பிரம்புகள் - | 120 | |
| **இயன் மருத்துவப்பகுதி** | | |
| சிகிச்சையளித்த நோயாளிகளின் எண்ணிக்கை- | | 918 |
| நோயாளிகளின் வருகை - | 8451 | |
| **புனர்வாழ்வுச் சேவைகள்** | | |
| கடனுதவி பெற்றவர்கள் - | 339 | |
| மாணவர்கள் ஊக்குவிப்பு-பணம்பெற்றவர்கள் - | 47 | |
| **உளவள சேவைகளினால்** | | |
| பயனடைந்தவர்கள் - | | 2007 |
| வைத்தியசாலை - | | 350 |
| உளவள சேவைகள் - | | 7906 |
| வைத்தியசாலை - | | 1742 |



செயற்கைக்கால் பொருத்தும் பணியில் ஈடுபட்டுள்ள தொழில்நுட்பவியலாளர்கள், ஊனமுற்றோருக்கான முச்சக்கர வண்டிகள் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் தொழில்நுட்பவியலாளர்கள், விசேட காலணிகள், மற்றும் பட்டிகள் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் தொழில்நுட்பவியலாளர் ஆகியோரைப் படங்களில் காணலாம்.

# தமிழீழ மாணவர் எழுச்சி நாளன்று

## வலய ரீதியில் எழுச்சி ஊர்வலங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டத்தில் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட ஏற்பாடாகியுள்ளது.

இதன் முதற்கட்டமாக மாணவர்கள் யாவரும் தத்தமது பாடசாலைகளில் அலங்கார வளைவுகளை அமைத்து எழுச்சி பூர்வமாக அனுஷ்டிப்பர்.

இறுதி நாளன்று மாணவர்கள யாவரும் ஒன்று கூடி ஊர்வலமாக சென்று ஒதுக்கப்பட்ட பாடசாலைகளை அடைவர்.

இதன்படி,யாழ்.வலயம்-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் வடமராட்சி வலயம்-நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், தென்மராட்சி-சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், வலிகாமம்-யாழ். சங்கத்தானை சிவப்பிரகாச வித்தியாலயத்திலும், தீவகம்-வேலணை மத்திய கல்லூரியிலும் ஒன்று கூடுவர்.

காலை நிகழ்வுகள் 9.00 மணிக்கு ஆரம்பமாகும். இதன் போது எழுச்சி உரைகளும் ,மாணவர் எழுச்சி நாள் பிரகடனமும் வெளியிடப்படும். இதனைத் தொடர்ந்து மாலை நிகழ்வுகள் யாவும் 6.00மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும். இதன் போது மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

இறுதி நிகழ்வாக மாணவர்கள் பங்கேற்கும் இசைநிகழ்வுகள் இடம்பெறும்.

இராணுவ ஆக்கிரமிப்பின் மத்தியில் காவலரண்களாய் விளங்கும் எமது பாடசாலைகளை மீட்டெடுப்பதற்கும் தமிழ் மாணவாகளின் கல்வியில் சிங்களப் பேரினவாத அரசுகள் காட்டிவரும் ஒடுக்குமுறைகளை சர்வதேச சமூகத்திற்கு தெரிவிப்பதாகவும பல்லாயிரக்கணக்கான மாணவர்களும் கல்வியியலாளர்களும் இதில் கலந்துகொண்டு தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்துவர்.

விடுமுறை நாளாக இருந்தாலும எமது உணர்வலைகள்ள வெளிப்படுத்த அணிதிரண்டு வருமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# துறைமுகங்கள் அபிவிருத்தியில்

## அரசு அதிகமான அக்கறை

(கொழும்பு)

நாட்டிலுள்ள துறைமுகங்களைத் துரிதமாக அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்துமென துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம்கொழும்பு துறைமுகத்தின் ‘சபகி’ கொள்கலன இறங்குதுறையைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

துறைமுகங்களைத் துரிதமாக அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் முதற்கட்டமாக தெற்காசியப் பிராந்தியத்தின் முக்கிய துறைமுகமான கொழும்புத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

அத்துடன,காலி,திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை ஆகிய துறைமுகங்களும் விரைவில் தரமுயர்த்தப்படவுள்ளதுடன், கொழும்புத் துறைமுகத்தின் தெனபகுதியில் மேலும் 12 இறங்குதுறைகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதுதவிர, ஒலுவில மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களையும் அபிவிருத்தி செயவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இத்திட்டங்களுக்கென ஜப்பான அரசாங்கம முதற்கட்டமாக 590 கோடி ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது. இவற்றில் 450 கோடி ரூபா கொழும்புத் துறைமுக அபிவிருத்திக்கும்,140 கோடி ரூபா காலி துறைமுக அபிவிருத்திக்கும் பயன் படுத்தப்படவுள்ளன எனத் தெரிவித்தார். (உ-18,60)

# தலைவரின் கரங்களைப் பலப்படுத்த

# மாணவர்கள் உறுதிபூண வேண்டும்

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அழைப்பு

(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் விடுதலைக்காக அன்று மாணவனாக இருந்த சிவகுமாரன் தொடக்கம் பல்லாயிரம் மாணவர்கள் தமது இன்னுயிரைத தியாகம் செய்துள்ளனா. எமது மக்களின் விடுதலை, மாணவர் சமூகத்திலேயே தங்கி இருக்கின்றது எனற யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு மாணவா் சமூகம் அணிதிரள வேண்டும் தேச விடுதலைப் போராட்டத்தின் உந்துசக்தியாக மாணவர் சமூகம் திகழ வேண்டும் எனவே மாணவ்கள் அனைவரும் இந்த உறுதியுடன் மாணவா் எழுச்சி நாளான நாளை ஞாயிற்றுக் கிழமை அணி திரண்டு மாணவர் எழுச்சியினை சிங்களப் பேரினவாதத்திற்கும் சர்வதேசத்திற்கும் மீண்டும் தெரியப்படுத் துவோம்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,தமிழீழ மாணவர் எழுச்சி நாளை ஒட்டி வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த குறிப்பில் மேலும்,

எமது விடுதலைப் போராட்டத்தின் ஓர் எழுச்சி வடிவமாக உருக் கொண்டது மாணவர் போராட்டம். மாணவா் சக்தியினை அழித்தொழிப்பதன் மூலம் தமிழினத்தின் போராட்ட உத்வேகத்தைச சிதைக்கலாம் என் சிங்கள அரசு பல்வேறு வழிகளிலும் முயற்சித்து வருகின்றது.

பலவேறுபட்ட நெருக்கடிகளுக்குள் இருந்து வந்த எமது தாயக விடுதலைப் போராட்டம் இன்று முக்கிய காலகட்டம் ஒன்றில் இருக்கிறது. புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி 2 வருடங்கள் கடந்த நிலையிலும் தமிழ் மக்கள் வாழ்வில் இயல்வு நிலை ஏற்படவில்லை. இன்னமும் பல பாடசாலைகள் இராணுவ ஆக்கிரமிப்பாளர்களின் முகாம்களாக மாணவ சமூகத்திற்கு ஆத்திரமூட்டும் அசிங்கம் மிக்க ஒரு நரகலோகமாகவே காட்சி தருகிறது. ஆயிரமாயிரம் மாணவர்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாமல் அகதி முகாம்களில் அல்லலுறுகின்றனர்.

நிலைமைகள் இவ்வாறு இருக்க திட்டமிட்ட வகையில் அரசு பேச்சுவார்த்தையினை இழுத்தடித்து சமாதான காலத்தில் புத்திஜீவிகளையும் தேசப்பற்றாளர்களையும் கொன்றொழிப்பதன் மூலம் எமது விடுதலைப் போராட்டத்தினை அழித்து விடலாம் என பகற்கனவு காண்கின்றனர். சந்திரிகா அரசின் இநதக்கபட நோக்கத்தினைப் புரிந்து கொண்டு எமது தேசியத் தலைவரின கரங்களைப பலப்படுத்தி தேச விடுதலையை வென்றெடுக்க மாணவ சமூகம் உறுதியோடு தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என்றுள்ளது. (உ)

## மாணவர் எழுச்சிக்காய் அணி திரள்வோம்

தமிழ்த் தேசிய இனத்தினுடைய அபிலாஷைகளையும் தமிழ் மாணவ சமூகத்தினது பிரச்சினைகளையும் சிறிலங்கா அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் மீண்டும் ஒருமுறை எடுத்துரைப்பதற்காக தமிழீழ மாணவ எழுச்சிநாளான நாளை ஞாயிற்றுக் கிழமை ஒற்றுமையுடன் அணிதிரளவோம்.

இலங்கை உயர்தொழில்நுட்பக கல்வி நிறுவகம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்,

காலம் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டுவந்த தமிழ்த் தேசிய இனம் அடிக்கடி எழுச்சி கொண்டு தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையின் மூலம் எமது அபிலாஷைகளையும் கோரிக்கைகளையும சிறிலங்கா அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் காலத்திற்குக் காலம் பல்வேறு வடிவங்களில் எடுத்துரைத்து வருகின்றது. அந்த வகையில் மீண்டும் ஒரு தடவை மாணவா் எழுச்சி மூலம் எமது அபிலாஷைகளையும் கோரிக்கைகளையும் ஒரே குரலில் எடுத்துரைக்க தமிழீழ மாணவர் சமூகமே அணிதிரளுங்கள்.

தமிழ்த்தேசிய இனத்தினுடைய விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்க முன்னா் இருந்து இன்றுவரைக்கும் காலம் காலமாக எம்மை அடக்கி ஒடுக்கிய சிங்களப் பேரினவாத அரசுகள் தமிழ் மாணவா்களினது கல்வியை ஏதோ ஒரு வடிவத்தில் நசுக்கிக் கொண்டே வந்துள்ளனா். இவற்றையெல்லாம் நாம் இனியும் அனுமானிக்கமுடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரெலிக்கொம் நிறுவனத்தில் நிலவும்

# குறைபாடுகளைப் போக்க

## விரைவில் துரித நடவடிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தில் நிலவும் குறைபாடுகளை நீக்குவதற்குரிய துரித நடவடிக்கைகள் மிக விரைவில் மேற்கொள்ளப்படுமென தபால் மற்றும் தொலைத் தொடர்புகள் அமைச்சர் டி.எம். ஜெயரட்ண உறுதியளித்துள்ளார்.

இதில் நிலவும் குறைபாடுகளை நீக்குவதற்கெனக் குழுவொன்றும் விரைவில் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ள அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண இதுவிடயம் குறித்து மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தொலைபேசி புதிய இணைப்புகளைப் பெறுவதில் பல்வேறு சிரமங்கள் நிலவி வருகின்றன. இவற்றை நிவிர்த்தி செய்வதறகாகப் பல வெளிநாட்டு நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

மாதாந்தக் கட்டணப் பற்றுச் சீட்டுக்களை விநியோகிப்பதில் ஏற்பட்ட தாமதமானது, ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தை மிகவும் நிதிநெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது. எனினும், பாவனையாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், கட்டணங்களைப் பகுதி பகுதியாகச் செலுத்தக்கூடிய நிவாரண முறை விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

அத்துடன்,சர்வதேச தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பான நெருக்கடி நிலையை நிவிர்த்தி செய்வதற்காக ஜப்பானிய நிறுவனம் ஒன்றுடன் தற்போது பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு வருகிறது எனக் குறிப்பிட்டார். (உ-18,60)

## புதிய தலைவர்கள் ஜனாதிபதியால் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சிரேஷ்ட ஆலோசகரான பாலபட்டபெந்தி ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி சிபார்சின் பேரில் துறைமுக விமானப் போக்குவரத்து அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள பாலபட்டபெந்தி 1994 தொடக்கம் 2002 ஆண்டுவரை எட்டு ஆண்டுகள் ஸ்ரீலஙகன் எயார்லைன்ஸின் இயக்குநராக இருந்துள்ளார்.

இதேவேளை, இலங்கை வங்கியின் புதிய தலைவராக மணிக்நாகாவன்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

மணிக்நாகாவன்ன மத்திய வங்கியின் பிரதித் தலைவராகவும் கடமையாற்றினார் என்பது குறிப்பிடக்கக்கது. (ம)

# பல்கலைக்கழகங்களின்

# தகவல் தொ.நு.கற்கைக்கு

# மேலதிக மாணவர்கள் சேர்ப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் தகவல் தொழில்நுட்ப பாடநெறிக்கென மேலதிக மாணவர்களை சேர்த்துக் கொள்ளுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய தகவல் தொழில்நுட்பப் பட்டப்படிப்புப் பாடநெறிக்கான 600 மாணவர்கள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தற்சமயம் கொழும்பு, மொறட்டுவ, களனி மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களில் இத்தகவல் தொழிலநுட்பப் பாட்நெறி கற்பிக்கப்பட்டுள்ளது.

இவைதவிர, இப்பாடநெறிகளுக்காக மேலும் 600 மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18,60)

# ஆட்சியைத் தக்கவைக்க

# பிரித்தாளும் தந்திரோபாயத்தை

# கைக்கொள்கிறது புதிய அரசு

## தொழிலாளர் தேசிய சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமானது பிரித்தாளும் தந்திரோபாயத்தின் மூலம் தமது ஆட்சியைத் தக்க வைத்துக கொளள முயல்வதாக தொழிலாளா் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.ஏ.கந்தசாமி குற்றம் சுமத்தியுள்ளார்.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

தமிழ் பேசும் மக்களின் பலமாக விளங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயககத்திற்குள் பிளவுகளை ஏற்படுத்தி தமிழ் பேசும் மக்களின் பேரம் பேசும் சக்தியைக் குறைக்க இந்த அரசாங்கம், மற்றும் அரசாங்கத்தின் உப பிரிவுகள் என்பன தீவிர முயற்சிகளை மேற்கொண்டன.

இதேவேளை, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் இன்று பல பிரிவுகளாகச் சிதறுண்டு போவதற்கும் இநத அரசாங்கத்தின் சதித்திட்டஙகளே காரணமாக அமைந்துள்ளன.

இவ்வாறான குறுகிய அரசியல் இலாபம் கருதிய செயற்பாடுகள் நடைமுறைச் சமாதான முயற்சிகளை தளர்வடையச் செய்துவிடும் என்பதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, சிறுபான்மைக் கட்சிகளைப் பலவீனமாக்குவதன் மூலம் தமது ஆட்சியைத் தொடரலாம் என்ற நிலைப்பாட்டை ஜனாதிபதி மாற்றிக கொள்ள வேண்டும். இதன்மூலம நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (உ-121)

# அடுத்தடுத்த ரயில் விபத்துக்களுக்கு சதிச் செயல்கள் காரணமா?

## மேலதிக விசாரணைகள் நடக்கின்றன

(கொழும்பு)

48 மணி நேரத்திற்குள் நான்கு புகையிரதங்கள் தடம் புரண்டதால், இதிலே ஏதும் சதிமுயற்சிகள் அல்லது நாசகாரசக்திகளின் கைவரிசை இருக்கலாமா என்பதை போக்குவரத்து அமைச்சு ஆராய்ந்து வருகிறது.


காலியிலிருந்து புறப்பட்ட புகையிரதமொன்று கோட்டையை அண்மித்த வேளையில் தடம் புரண்டது. வவுனியாவிலிருந்து மாத்தறையை நோக்கிப் பயணித்த ராஜரட்ட ரஜினி என்ற புகையிரதம் நேற்றுமுன்தினம் தடம்புரண்டது. உடரட்ட மெனிக்கே என்ற புகையிரதம் பதுளை-கொழும்பு பாதையிலும், இன்னுமொரு பொதியேற்றும் புகையிரதம் குருநாகலிலிருந்து கொழும்புக்குச் செல்லும பாதையில் அம்பபுசா பகுதியில் கடந்த புதன்கிழமை தடம்புரண்டன.

இவை வெறும் விபத்துக்களே என்றும் இதிலே நாசகார சக்திகளின் சதியெதுவும் இல்லை என்றும் போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளாா. இருந்தபோதிலும், இதுகுறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொளளப் பணித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# விளையாட்டுச் செய்திகள்

## பிரெஞ்சு பகிரங்க டெனிஸ்
## ஒற்றையர் இறுதியாட்டத்தில் ரஷ்யாவின் வீராங்கனைகள்

பரிஸில் நடைபெற்று வரும் பிரெஞ்சு பகிரங்க டெனிஸ் சுற்றுப் போட்டிகளின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் விளையாட ரஷ்ய வீராங்கனைகள் தகுதி பெற்றுள்ளார்கள் கிராண்சிலாம் டெனிஸ் போட்டி ஒன்றின்



இறுதிப் போட்டியில் விளையாடுவதற்கு ரஷ்ய வீராங்கனைகள் இருவர் ஒரே நேரத்தில் தகுதி பெற்றுள்ள முதலாவது சந்தர்ப்பமாகவும் இது அமைந்துள்ளது.



நேற்று முன்தினம் நடைபெற்ற பிரெஞ்சு பகிரங்க டெனிஸ்சுற்றுப் போட்டியின் மகளிர் பிரிவு ஒற்றையர் அரையிறுதியாட்டமொன்றில் ரஷ்ய வீராங்கனையான எலீனா டெமன் ரீவா ஆர்ஜன்டீன வீராங்கனையான போர்லா ஸாகச்சை 6:0, 7:5 என்ற இரண்டு நேர் செற்கணக்கில் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரி வாகியிருக்கின்றார்.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் ரஷ்ய வீராங்கனையான அனராசியா மிஸ்கினா அமெரிக்க வீராங்கனையான ஜெனீபர் கேப்பிரியாட்டியை 6:2, 6:2என்ற இரண்டு நேர்செற்கணக்கில் இலகுவான வெற்றியைப் பெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்திருக்கின்றார்.

இவ்விரு ரஷ்ய வீராங்கனைகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி இன்று பரிஸில் நடைபெறவுள்ளது இப்போட்டியை கண்டுகளிக்க பெரும் அளவிலான ரஷ்ய டெனிஸ் ரசிகர்கள் வருகை தருவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (68)

## ஒலிம்பிக் தீபம் உலகை வலம் வரும் பயணத்தில்

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 13 திகதி எதென்சில் ஆரமபமாகவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு நேற்று முன்தினம் ஏற்றி வைக்கப்பட்ட ஒலிம்பிக் சுடர் உலகை வலம்வரும் பயணத்தை ஆரம்பித்துள்ளது. இச் சுடர் ஏற்றி வைக்கப்பட்ட தினத்தில்இருந்து 38 நாட்களில் 27 நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



ஒலிம்பிக் போட்டிகளின் பாரம்பரியங்களுக்கு அமைய போட்டி நடைபெறும் நாட்டில் ஏற்றி வைக்கப்படும் ஒலிம்பிக்தீபம் ஏனைய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவது வழமையாகும். நேற்று முன்தினம் ஏற்றி வைக்கப்பட்ட இந்த ஒலிம்பிக் தீபத்தினை வைபவ ரீதியாக ஏனைய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதற்கமைய ஐந்து கண்டங்களைச் சேர்ந்த நாடுகளுக்கும் அனுப்பிவைக்கப் படவுள்ள இவ் ஒலிம்பிக் சுடரினை முதல் முதலாக அவுஸ்திரேலியா சார்பில் உலகின் முன்னணி தடகள வீராங்கனையான காத்தி பிறீமனிடம் கையளிக்கப்பட்டது. தொடர்ந்து இச்சுடர் உலகை வலம் வரும் வகையில் ஏனைய நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப் படவுள்ளது. (யே-68)

## வட-கிழக்கு மாகாணத்தில் யாழ். அணி முதலிடம்

வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் இடம் பெற்ற மட்டுப்படுத்தப்பட்ட கிரிகெற் போட்டிகளில் வெற்றிவாகை சூடி யாழ்.மாவட்ட அணி இம்மாகாணத்தில் முதலிடத்தைப் பெற்றது.

இறுதியாக மன்னார் மாவட்ட அணியுடன் மோதிய யாழ்.அணி 109 ஓட்டங்களால் வெற்றிவாகை சூடியது 45.1 ஓவரில் யாழ்.அணி 298 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் அணி 189 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்தது.

யாழ்.மாவட்ட அணி தான் பங்கு பற்றிய நான்கு போட்டிகளிலும் வெற்றிவாகை சூடியதன் மூலம் வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கான கிரிக்கெட் அணிக்கு 7 வீரர்களை அனுப்பும் சந்தர்ப்பத்தையும் பெற்றுக் கொண்டது. (யே)

## கென்ய அணிக்கு பீபா தடைவிதிப்பு

சர்வதேச கால்பந்தாட்ட அமைப்பான பீபா சர்வதேச கால்பந்தாட்ட போட்டிகளில் விளையாட கென்யாவுக்கு தடைவிதித்துள்ளது. அதன்படிகென்யாவின் தேசிய கால்பந்தாட்ட அணிக்கும் கென்யா விளையாட்டுகழக கால்பந்தாட்ட அணிகளுக்கும் சர்வதேச கால்பந்தாட்டப் போட்டிகளில் விளையாட தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கென்ய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் நடவடிக்கைகளில் அந்நாட்டு அரசாங்கம் தலையிட்டதனாலேயே அந்நாட்டு கால்பந்தாட்ட அணிக்கு தடைவிதிக்கப்பட்டிருப்பதாக பீபா மேலும் அறிவித்துள்ளது.

2006ஆம் ஆண்டு உலக கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டிகளில கலந்து கொள்வதற்கான கென்யாவின் முதலாவது தகுதி காண் போட்டி நாளை நடைபெறவிருந்தது. இந்தத் தடை உத்தரவினை அடுத்து இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் கென்யா இழந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

உலகக் கால்பந்தாட்டப் போட்டிகளில் ஆபிரிக்க நாடுகள் அண்மைக்காலமாக மிக முன்னிலைக்கு வந்துகொண்டிருக்கின்றன. அதிலும் கென்ய அணி ஆச்சரியமான பல வெற்றிகளைத் தொடர்ச்சியாகக் குவித்து வந்த வேளையில் இத் தடை உத்தரவு வந்திருப்பது பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. (யே-68)

## சர்வதேச ஒலிம்பிக் குழுவின் உபதலைவருக்கு தண்டனை!

சர்வதேச ஒலிம்பிக் குழுவின் உபதலைவரான கிம் உன் யுங்கிற்கு இரண்டரை வருடம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 6 இலட்சத்து 70 ஆயிரத்து 100 அமெரிக்க டொலர்கள் அபராதமாகவும் விதிக்கப்பட்டுள்ளது.



மோசடிக் குற்றச்சாட்டு ஒன்றின் பெயரில் தென் கொரிய நீதிமன்றம் ஒன்று கிம் உன் யுங்கிற்கு இந்தத் தண்டனையை விதித்திருக்கின்றது. 73 வயதுடைய கிம் உன் யுங் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் அதிகாரம் மிக்க அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களில் ஒருவர் ஆவார்.

இவர் கடந்த ஜனவரி மாதம் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வரும் போது தென்கொரிய பொலிஸாரினால் கைது செய்யப் பட்டிருந்தார். பின்னர் பிணையில் விடுதலையாகியிருந்த இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

தற்போது இந்தக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதை அடுத்து கிம் உன் யுங்கிற்கு இரண்டரை வருட சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.இவர் 32 இலட்சத்து 70ஆயிரம் அமெரிக்க டொலர்களை இலஞ்சமாகப் பெற்றிருந்தார் என்றே இவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. (யே-68)

## ஒத்திவைக்கப்பட்ட போட்டிகள் 13 ஆம் திகதி நடைபெறும்

கடந்த புதன்கிழமை நடை பெறவிருந்த யாழ்.மாவட்ட பிரதே செயலர் பிரிவுகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகளின் இறு நாள் நிகழ்வும், பரிசளிப்பு வைபவமும் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகா இ.றொகான் ராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இப்போட்டி நிகழ்வுகளில் முதல் நாள் நிகழ்வுகள் கடந்த முதலா திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்று முடிவடைந்திருந்தபோது இரண்டாம் திகதி இறுதிநாள் நிகழ்வுகள் மட்டுமே நடைபெறவில்லை மேற்படி இரண்டாம் நாள் நிகழ்வுகள் மட்டும் எதிர்வரும் 13ஆம் திக அதே நிகழ்ச்சி நிரலுக்கு அமைய யாழ.துரையப்பா விளையாட் அரங்கில் இடம் பெறவிருப்பதாக மாவட்ட விளையாட்டு அதிகா மேலும் தெரிவித்திருந்தார். (யே-6

## விஸ்வா ஞாபகார்த்த கரபந்து இறுதிப்போட்டி

நாட்டுப்பற்றாளர் விஸ்வா ஞாபகார்த்த கரப்பந்து இறுதிச் சுற்று போட்டி இன்று திருநெல்வேலி கிழக்கு முடமாவடி ஞானவைரவ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும்.

இன்று இரவு 7.00மணிக்கு இடம் பெறவிருக்கும் இவ் இறுதி யாட்டத்தில் செற்அப் மற்றும் ஓவர் கேம் முறையில் ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளை முகாமையாளர் நா.நாகேஸ்வரன் பிரதம விருந்தினராக இந்நிகழ்வில் கலந்து கொள்வார். (யே

## பங்களாதேஷ்"டனான டெஸ்ட் போட்டியில் வெற்றி அல்லது வெளியேற்றம் பிறையன் லாரா சவால்!

பங்களாதேஷ் அணியுடன் நேற்று ஆரம்பமாகியுள்ள இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியி



வெற்றி பெறாதுபோனால் தாம் தலைமைப் பதவி ராஜினாமாச் செய்வதாக மேற்கிந்திய அணித்தலை லாரா சவால் விடுத்துள்ளார்.

நாங்கள் வெற்றிபெறாது போனால் இங்கிலாந்துக்க யத்தில் எனது அணியின் தலைமைப் பதவியை ந வகிக்கமாட்டேன். 5 நாட்களில் புதிய அணியொன் எம்மால் வெல்ல முடியாது போனால் அதன் அர்த் அணிக்குப் புதிய தலைமை தேவை என்பதாகும் எ லாரா சொன்னார்.

மீண்டும் கடந்த வருடம் தலைமைப் பொறுப்பை ஏற் கொண்ட லாரா 17 டெஸ்ட்களுக்குத் தலைமை தா இரண்டு டெஸ்ட்களையே வென்றுள்ளமை குறிப்பி தக்கது. (

# பாதுகை

டொமினிக் ஜீவா

நீண்ட காலமாக மல்லிகை இலக்கிய இதழின் ஆசிரியராகப் பணியாற்றும் டொமினிக்ஜீவா ஈழத்து முற்போக்கு இலக்கிய வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். சாகித்திய மண்டலப் பரிசினையும் பாராட்டுக்களையும் பெற்றவர். இவர் எழுதிய "பாதுகை" இங்கு பிரசுரமாகிறது.

**நேற்றைய தொடர்ச்சி...**

"இந்தாப்பா உன்னட்ட எத்தனை தடவை அலையிறது?"

பழக்கப்பட்ட குரல்.

நிமிர்ந்து பார்த்தான்.

"சே! இந்த நசராணி புடிச்ச மனுஷன் இவ்வளவு நாளும் ஊட்டிலே சும்மா குந்தி இருந்திட்டு, இப்ப வந்து துலைக்கிறானே?"

அந்த மலாயாப் பென்சன்காரர் ஒவ்வொரு படியாக மேலேறுகின்றார். உருவம் உயர்ந்து கொண்டே வருகின்றது.

வெந்து கொண்டிருக்கும் சுடு மணலில் கால் வைத்தவனைப்போல், ஒருகணம் திணறுகின்றான், முத்து முஹமது.

மனம் மருளுகின்றது.

சற்று மௌனம்.

"இந்தாப்பா...தலையை நிமித்திப் பார்."

நிமிர்ந்து தலையைத் திருப்புகின்றான். நெஞ்சம் ஆட்டுக்குட்டியின் வாலைப் போல பதறுகின்றது.

"அன்டைக்குத் தந்த அந்தச் செருப்புச் சோடியை எடு!"

கடையைச் சரியாக அடையாளம் கண்டு கொள்ளாமல் இடம் தவறி வந்து விட்டவரைப் பார்ப்பது போல, அலட்சியமாகப்பார்த்தவண்ணம் நடித்து, நேத்து, "எதைக் கேட்கிறீங்க? எந்தச் செருப்பு ?" என்றான்.

"அதுதானப்பா... அண்டைக்குத் தந்தேனே, அந்தச் செருப்புக்களைத்தான்..."

"எப்ப உங்களுக்குத் தாற தவணை?"

"அண்டைக்கு வாறனெண்டன், வரமுடியாமல் போச்சு. அதுதான் இணடைக்கு வந்திருக்கிறேன். ம்....! எடு....!" சொல்லிகொண்டே மடியைப் பிரித்து மணிப்பர்ஸை எடுத்து, விரித்துத் துழாவி ஒரு ஐம்பது சத நாணயத்தையும் இருபத்தைந்து சத நாணயம் ஒன்றையும் எடுத்தார்.

தவணை தப்பிப் போச்சானால் செருப்பு இங்கே இருக்காது; வெளியிலை குப்பை கூடைக்கை எறிச்சிருப்பம் வார்த்தைகளை அளந்து அவருடைய முகத்தை ஊடுருவிப் பார்த்த வண்ணம் கூறினான் முத்து முஹமது.

குரலில் கூச்சம்;சற்று அச்சமும் நிழலாடியது.

அவர் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை வெள்ளைக்காரனான வெள்ளைக்காரனுக்கே கண்ணில் விரலை விட்டு ஆட்டிய என்னை இந்தப் பொடிப்பயல் ஏமாததவா!

எனற எண்ணம் பென்சன்காரருடைய மனதில் இழை யோடினாலும் ஆத்திரத்தை வெளிகுத் தெரியாமல் மறைத்தவாறு, என்னப்பா, விளையாடுகிறாய்? புத்தப் புதிசு குப்பேக்க எறிஞ்சு போட்டன் என்கிறாயே? பதினெட்டு ரூபாயல்லவா?" என்றார்.

"சும்மா சத்தம் வேண்டாம். குப்பைக்கை எறிஞ்சு போட்டன் எண்டால் எறிஞ்சு போட்டன ஆமா, இப்ப என்ன செய்யச் சொல்கிறீங்க?"- இந்தத் தடவை அவனுடைய பேச்சில் ஓர் அசாதாரணமான போலிக் கோபத் தொனி ஒலித்தது.

ஆத்திரத்தை அடக்கிக் கொள்ள அவர் சற்றுச் சிரமப்பட்டாலும் முடிவில் நெஞ்சுக் கொதிப்பை அடக்கிக் கொண்டு, "என்னப்பா இப்படிப் படுபொய் சொல்லுறியோ! சததியம் பண்ணிச் சொல்லுவியா?" கேட்டார் தொடர்ந்து, "உன் பெத்த தாயைக் கொண்டு சத்தியம் பண்ணு! எறிஞ்சுபோட்ட னென்டு உன் தாயைக் கொண்டு சத்தியம் பண்ணுவியா" என்றார்.

"உம்மா மேலாணையா எறிஞ்சு போட்டன்!"

"உன்றை அப்பனைக் கொண்டு சத்தியம் பண்ணு, பார்க்கலாம்?"

"வாப்பா மேலாணையா குப்பேக்கை எறிஞ்சிட்டேன்"

"ஆ!"...வாயைப் பிளந்தார். சிந்திப்பதற்கும் அப்பாறபட்ட நிலை. ஒரு வெறி. 'ஏமாற்றுகிறானே!



என்ற நினைப்பில் ஏற்பட்டஒருவத ஆக்ரோஷம் உலைப் பட்டரை போன்று நெருப்பை உமுழும் அளவிற்கு உணர்ச்சி கொதிக்கின்றது. உன்ரை கடவுளைக் கொண்டு சத்தியம் பண்ணு !ஹூம்!... பாண்ணு.கடவுளைக் கொண்டு சத்தியம் !"என்று ஆத்திரமாகக் கத்தினார்.கூச்சலிட்டார் என்றே சொல்லலாம். சொல்லிக் கொண்டே படியேறித் தாவி மேலேறி, கதவின் கீழ் நிலைப்படியுடன் பொருத்தப் பட்டிருந்த ஒருசாண் அகல முள்ளதும் பட்டறைப் பலகையுடன இணைக்கப்பட்டிருந்ததுமான நிலைத்தளத்தில் நின்று கொண் டார்.

"ஆண்டவன் ஆணையாக எறிஞ்சுபோட்டன்!"

"அட படுபாவி!கடைசியிலை கடவுளைக் கொண்டு கூடச் சத்தியம் பண்ணிப்போட்டானே?"

ஆயுத மற்று, யுத்த களததில் நிற்கும் போர் வீரனின் மனநிலை. உலகமே தன்னைத் தன்னத் தனியாகக கைவிட்டு விட்டதோ என்ற தவிப்பு, பென்சன்காரரின் நெஞ்சில் நீதியை நிலை நிறுத்தி கடவுளைக் காப்பாறறி விடுவதைவிட, தன்னுடைய சுயகௌரவத்தை எப்படியாவது நிலை நிறுத்தியாகவேண்டுமென்ற அசட்டுப் பிடிவாதத்துடன் சுற்று முற்றும் பார்க்கின்றார்.

ஒன்றுமே சட்டென்று மனதில் பிடிபடவில்லை. நினைவுக் கோணத் தில் மின்னல் பளிச் சிட்டது.

தனது காலில் அணிந்திருந்த செருப்புக்களைக் காலை விட்டு நகர்த்திக் கழற்றினார்.

-"ப்பூ! இனி என்னத்தைத் தான் செஞ்சு கிழிச்சிடப் போறார் பார்ப்போமே நினைத்திருந்த முத்து முஹம்மதுவின் காதுகளில் பென்சனகாரர் உச்சரித்த வார்த்தைகள் தெளிவாக விழுந்தன.

"இதுதான் கடைசித் தடவை! ஓமோம், கடைசிமுறை. எங்கை இதை தொட்டுச்சத்தியம் பண்ணு, பார்ப்பம்? உனக்குச் சோறு போடுற இந்தச் செருப்பைத் தொட்டு சத்தியம் பண்ணு, உண்மையாய் எறிஞ்சு போட்டாயென்டு கண்கள் தரையில் தாழ்ந்து பதிந்து தரையோடு உறவாடிக் கொண்டிருந்த, கீழே அனாதையாக விடப்பட்டிருநத, அந்தச் செருப்புக்கள் இரண்டையும் அர்த்தத்தோ'டு வெறித்துப் பார்த்தன அவனுடைய விழிகளில் சலனம் , மனச்சாட்சியின் மருண்ட பார்வை அவனுள்.

"-இதைத் தொட்டா நான் சத்தியம் பண்ணுகிறது? எனக்குச் திங்கச் சோறு தாற இதைக் கொண்டா நான் பொய் பேசுறது?"

மௌனம், அந்த மௌனம், பென்சன்காராரின் ஆவேசம் அலைக் கழிக்கும் நெஞ்சில் வெற்றிப் பெருமித அலைகளைப் பாய்ச்சுகின்றது.

என்ன,பேசாமல் சும்மா இருக்கிறாய்? ஹூம் சத்தியம் பண்ணன்".

"முடியாது என்பதற்கு அடையாளமாக அவன் தலை அங்கும் இங்கும் ஆடி, அசைந்து மறுப்புத் தெரிவித்தது..

"ஏலாது! இதைக்கொண்டு நான் சத்தியம் பண்ண மாட் டேன் என்றான் முத்து முஹமது.

முற்றும்

---

( 05ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வலுவிழந்தோர் வாழ்வில்...

பாவனைக்கும் சிறந்த அமைப்பை உடையதாக ஜெய்ப்பூர் கால்கள் காணப்படுகின்றன. இவற்றைத் தயாரிக்கும் தொழில்நுட்ப வியலாளர்கள் எமது பயனாளிகளில் சிலராவர். இப்பாதமானது இறப்பரினால் செய்யப்படுவதால் காலணிகள் எதுவும் இன்றி இயல்பாக நடக்கமுடியும். இதன் வெளிப்புறமானது மிகவும் திடகாதிரமானதாயும் உறுதியானதாயும் தண்ணீர் உட்செல்லாத தன்மையினதாயும் கரடு முரடான பாதையில் நடக்கக் கூடியதாயும் மடக்கிப் உட்காரக்கூடியதாயும் இது காணப்படுகிறது. எமது தொழில்நுட்பமானது சர்வ தேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட சிறந்த தொழில்நுட்பமாய் இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை எமது வெற்றியையே பறைசாற்றுகிறது.

**கேள்வி:எவ்வகை தாக்கங்களுக்குள்ளானோர் இவ் ஸ்தாபனம் மூலம் இதுவரை பயன்பெற்றுள்ளார்கள் ?**

**பதில் :**எமது சேவைமூலம் மிகவும் கூடுதலான பயனைப் பெற்றவர்களாக மிதிவெடிகளில அகப்பட்ட வர்க்கத்தினரே எனலாம். இவர்களைத் தவிர ஏறிகணை வீச்சில் ,குண்டுத் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூட்டில் என்று யுத்தத்தின் பாதிப்பினால் வலுவிழந்தோரைக் குறிப்பிடலாம். இவற்றைத் தவிர வீதி விபத்துக்களிலும், தொழிற்சாலை விபத்துக்களிலும் போலியோ நோயினாலும், நீரிழிவு, குஷ்டரோகம், வாள், கத்தி வெட்டு, உயரமான இடத்தில் இருந்து விழுதல், சூறாவளி, விலங்குகளின் தாக்கம் புற்று நோய்...என பல்வேறு இயற்கைத் தாக்களில் உட்பட்டோரும் இதன் மூலம் பயன் பெற்றவர்களாவர்.

**கேள்வி: 2004ஆம் ஆண்டில் 17வது நிறைவு விழாவையொட்டி பயனாளிகளுக்கு உங்கள் திட்டம் மூலம் என்ன செய்வதாக எண்ணி உள்ளீர்கள் ?**

**பதில் :** வருடம் தோறும் பல நிகழ்வுகளை இவர்களுக்காக எமது ஸ்தாபனம் முன்னெடுத்து வருகின்றது. 17வது நிறைவு விழாவினையொட்டி ஜூலை மாதமளவில் நாம் எமது பயனாளிகளுக்கு கவிதை, கட்டுரை, நடனப் போட்டிகளையும், விளையாட்டுப் போட்டிகளையும் நடத்த எண்ணியுள்ளோம். அதற்கான வேலைகளும் இடம் பெற்றுவருகின்றன.இந்த விழா சிறப்புடன் அமைய நாம் யாழ்.குடா நாட்டு மக்களின் பரிபூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம். இது போன்ற நிகழ்வினால் வலுவிழந்தோரும் தம் ஆற்றலை வெளிப்படுத்தி, சமுதாய நீரோட்டத்தில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பினை வழங்கும் வழிமுறையாக இந்நிகழ்ச்சிகள் அமையும் என்பதே எமது நோக்கம்.

**கேள்வி: இறுதியாக உங்களிடம் ஒரு வினா. உங்கள் தருமப்பணிக்கு இனிவரும் காலத்திலே பணம் அறவிடப்படவுள்ளதாகக் கேள்விப் பட்டோம். அது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

**பதில்:** எமது திட்டதத்திற்கு உதவி புரிந்து வரும் நாடுகள் தற்போது எமது நாட்டில் நிலவும் அமைதிச் சூழ்நிலை காரணமாயும், சமாதானப் பேச்சுக்கள் வெற்றியடையும் என்ற நம்பிக்கையிலும் மற்றும் நிதி வழங்கும் நாடுகளின் கொள்ளை மாற்றங்கள் காரணமாகவும் இதுவரை காலமும் கிடைத்த உதவிப் பணம், உதவிகள் சிலவேளைகளில் மாற் றங்கானக்கூடிய நிலைக்குத் தள்ளப்படும். இதுவரை காலமும் தருமப்பணியாக மேற்கொண்டு வந்த எமது இச் சேவைக்கு மக்களிடம் மிக விரைவில் கட்டணம் அறவிடும் அத்தியாவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே படிப் படியாக கட்டண அறவீடு முறையை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம், என திருமதி யோகநாதன் கூறினார். ■

**2004ஆம் ஆண்டு தை மாதம் 04ம் திகதி முதல் சித்திரை மாதம் 04ம் திகதி வரை நடைபெற்ற வேலைகளின் புள்ளிவிபரத் தகவல்**

| செயற்கை அவயவங்கள் பொருத்தும் பகுதி | தை | மாசி | பங்குனி | சித்திரை |
|---|---|---|---|---|
| முழங்காலுக்கு கீழ்ப்பாகம் | 14 | 07 | 12 | 19 |
| முழங்காலுக்கு மேல்பாகம் | 01 | 01 | 03 | 02 |
| பாதம் | 21 | 21 | - | - |
| பட்டிகள் | 04 | 43 | 36 | - |
| செயயப்பட்ட திருத்த வேலைகள் | 90 | 71 | 69 | 60 |
| **சார்புறுப்புப் பொருத்தும் பகுதி** | | | | |
| கலிப்பர் | - | 01 | 01 | 04 |
| பாத இணைப்புப் பட்டி | - | - | - | - |
| சிறப்புப்பட்டி | - | - | - | 01 |
| சிலும்புகள் (ஸ்பிளின்ற்) | 04 | - | 02 | 01 |
| சப்பாத்து உயர்த்திக்கொடுத்தல் | 01 | - | 01 | 02 |
| **துணைக்கருவிகள் தயாரிக்கும் பகுதி** | | | | |
| முச்சக்கர வண்டி | 02 | 03 | - | 02 |
| நாற்காலிகள் | 04 | 01 | 02 | - |
| கை ஊன்றுகோல்கள் | 02 | 06 | 02 | 06 |
| முழங்கால் ஊன்றுகோல்கள் | 04 | - | 03 | 02 |
| உருக்கு நடைதாங்கிகள் | 05 | 03 | 05 | 02 |
| ஏனைய வகை | 02 | 02 | - | 02 |
| பெறம்புலேற்றர் | - | - | - | - |
| பயிற்சிக்கான சைக்கிள்கள் | - | - | - | - |
| வெள்ளைப் பிரம்புகள் | - | - | - | - |
| **இயன் மருத்துவப்பகுதி** | | | | |
| சிகிச்சையளித்த நோயாளிகளின் எண்ணிக்கை | 10 | 11 | 14 | 13 |
| நோயாளிகளின் வருகை | 21 | 18 | 21 | 21 |
| **புனர்வாழ்வுச் சேவைகள்** | | | | |
| கடனுதவி பெற்றவர்கள் | - | - | - | - |
| மாணவர்கள் ஊக்குவிப்பு பணம்பெற்றவர்கள் | - | - | - | - |
| உளவள சேவைகளினால் பயனடைந்தவர்கள் | 20 | 13 | 21 | 27 |
| வைத்தியசாலை | 08 | 05 | 04 | 06 |
| உளவள சேவைகள் | 53 | 34 | 44 | 60 |
| வைத்தியசாலை | 31 | 19 | 16 | 17 |

பிரதி வெள்ளி தோறும்
வலம்புரியுடன்
KID'S OF ENGLISH
(ஆங்கில இணைப்பு)
வெளிவரவுள்ளது.
பள்ளிச் சிறுவர்களே!
மற்றும் பருவத்தினரே!
பயனடைய வாங்குங்கள்.
Kid's of English

மீண்டும் உங்கள் வலம்புரியில்
விவாத அரங்கு
விடயம்
தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப-சமூக கலாசார பண்பாட்டு உறவுகள்
பலப்படுகின்றது
அப்படுகின்றது
உங்கள் கருத்துக்களை
விவாத அரங்கு
வலம்புரி
இல. 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு விரைவாக அனுப்பிவையுங்கள்

# ஆரோக்கியமான வாழ்க்கை முறையினால் இருதய நோய்களைக் குணப்படுத்தலாம்

**மாரடைப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கும் இருதய நோய்களிலிருந்து விடுபடவும் இராஜயோகப் பயிற்சி மிகவும் அவசியமானது என வைத்திய நிபுணர் சதீஸ் குமாரகுப்தா ஆய்வுகள் மூலம் கண்டறிந்த உண்மைகள் கட்டுரை வடிவில் வலம்புரியில் வெளியாகிவருகின்றன. அக்கட்டுரையின் இறுதிப்பகுதி இன்று வெளியாகிறது.**

ஆத்ம உணர்வுடையவர் எல்லா ஆத்மாக்களின் தந்தையான அமைதி, அன்பு, சக்தி, சந்தோஷம், தூய்மை, ஞானம் போன்றவற்றின் கடலாக இருக்கின்ற பரமாத்மாவாகிய இறைவனோடு தொடர்பு கொள்வதால் இந்தத் தெய்வீக குணங்களால் நிறைந்து காணப் படுவார். அதனால் அவருடைய எண்ணங்கள், உணர்ச்சி, மனோ பாவம், ஞாபகங்கள் எப்போதும் நேரானதாக இருக்கும். அவர் அன்பு, பாதுகாப்பை எப்பொதும் உணர்வதால் சக்தி பாய்வதில் ஏற்படுகின்ற தடைகள் திறந்து கொள்வதால் சரீரத்தில் ஏற்படுகின்ற அசௌகரியங்கள் குணமாகின்றன.

ஆன்மீக சக்தி, மனோசக்தி, பௌதீகசத்தி ஆகிய இவை மூன்றும் ஒருங்கிசைந்து பாயும் போது மனம், இதயம், சரீரம் என்றும் ஆரோக்கியமாகவும், செழிப்பாகவும், சந்தோஷமாகவும் காணப் படுகின்றன. ஆன்மீக சக்தியானது சக்திக் கடலான பரமாத்மாவிடம் இருந்து, ஆத்ம உணர்வுடைய வாழ்க்கை முறை மூலம் பெறப்படுகின்றது. நேரான எண்ணங்கள், உணர்ச்சி, மனோபாவம், ஞாபகங்கள், மனோசக்தியைக் கொடுக்கின்றன. பௌதீக சக்தியானது சரியான உணவு முறை, சரியான உடற்பயிற்சி, சரியான நித்திரை என்பவற்றால் பெற்றுக் கொள்ளப் படுகின்றது. ஆன்மீக சக்தியைப் பெற்றுக் கொள்வதற்கான மிகச் சிறந்த நேரம் அதிகாலை 4மணி தொடக்கம் 5 மணி வரையாகும். அகஞ்சுரக்கும் சுரப்பிகளின் தலையைச் சுரப்பியில் இருந்து **(Pituitarygland)** அதிகளவு ஓமோன்கள் இந்த நேரத்திலேயே சுரக்கின்றன. இந்த நேரத்தில் நீங்கள் பேரானந்த நிலையில் இருக்கும் போது, அதிகளவு ஓமோன்கள் அடுத்து வரும் 24 மணி நேரமும் வெளியாகுவதால் நாம் நாள் முழுவதும் பேரானந்தம், அன்பு, சந்தோஷத்தை அனுபவம் செய்வோம்.

### ஓமோன்களின் பங்களிப்பு

இந்த ஓமோன்கள் சரியான அளவு காலை நேரத்தில் சுரக்கப் படவில்லை என்றால் நாள் முழுவதும் எரிச்சல், கோபம், பதற்றம், களைப்பு என்பவற்றையே அனுபவம் செய்வோம். ஆகவே அதி காலை 4 மணிக்குத் துயில் எழுந்து முகத்தைக் கழுவி, காதுகளை தேய்த்து விட்டீர்கள் என்றால் விழிப்பாக இருப்பீர்கள். அந்த நேரத்தில் தியானம் செய்யப் பழக வேண்டும். நான் ஓர் ஆத்மா, புள்ளி வடிவான ஒளியாக இருக்கின்றேன். நான் அமைதி சொரூபமானவன். நான் பரமாத்மா, பரமதந்தையின் குழந்தை. அன்பு, அமைதி, சந்தோஷம், பேரானந்தம், சக்தி, தூய்மை என்பவற்றின் கடலாக இருக்கின்ற இறைவனிடம் இருந்து அந்த அமைதி, அன்பு, தூய்மை, சந்தோஷ அலைகளைப் பெற்று நிரம்புகின்றேன். என் சரீரம் முழுவதும் அந்த அன்பு, அமைதி, தூய்மை பரவுகின்றது. இவ்வாறான நல்ல தூய எண்ணங்களை உருவாக்கி மேலான பரமாத்மாவாகிய இறைவனின் நினைவில் இருக்கும் போது அதிகளவு ஆன்மீக சக்தி கிடைக்கின்றது.

காலை எட்டு மணியளவில் பதட்டம் அல்லது அழுத்தத்திற்குரிய ஓமோன்கள் அதிரினல் சுரப்பியில் இருந்து **(Adrenal gland)** வெளிவருகின்றன. ஆகவே காலை எட்டு மணி வரை நாம் அக அமைதியைப் பேண வேண்டும். வெளி உலகம் தொடர்பில் வருவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் இந்த நேரத்தில் நாம் புதினத் தாள்களை வாசித்தால் அவை எதிர்மறையான எண்ணங்கள், உணர்ச்சி, மனோபாவம், ஞாபகங்களையே ஏற்படுத்தும். ஆகவே அதிகளவு அழுத்தம் அல்லது பதட்டத்திற்குரிய ஓமோன்கள் சுரக்கப்படுவதால் நாள் முழுவதும் மற்றவர்களோடு எதிர்தாக்கத்தைக் கொடுப்பது, பயம் போன்ற உணர்வே காணப்படும்.


### மனதை அமைதியாக வைத்திருங்கள்

ஆகவே, காலை 4 தொடக்கம் 8 மணிவரையும் உங்களை அமைதியாக வைத்துக் கொள்ளுங்கள். இறைவனுடைய ஞானத்தை, நல்ல நூல்களை அந்த நேரத்தில் படிக்கலாம். அவை உங்களுக்கு நேரான எண்ணங்கள், உணர்ச்சி, மனோபாவம், ஞாபகங்கள் ஏற்பட உதவுகின்றன. உண்மையே உங்களுக்கு இவற்றை வழங்குகின்றது. பொய்மையானது எதிர்மறையான எண்ணங்கள், உணர்வு ஆகியவற்றை ஏற்படுத்துகின்றது. காலை 8 மணிக்குப் பின் புதினத் தாள்களை வாசிக்கலாம்.

ஆத்மாவில் இருந்து வருகின்ற ஆன்மீக சக்தியானது மனதின் ஊடாக உடலுக்குச் செல்கின்றது. மனமே ஊடகமாக செயல்படுகின்றது. உங்கள் மனம் எதிர் மறையானதாக இருந்தால் இந்த சக்தியானது இதயம், இரப்பை போன்ற உடலின் பாகங்களுக்குச் செல்ல முடியாது. ஆகவே சௌகரியங்கள், நோய் ஏற்படுகின்றது. ஆகவே உங்கள் மனதை நேராக வைத்திருங்கள்.

காலையில் விரைவாக நடக்கின்ற உடற்பயிற்சியை செய்யலாம். அக நோக்கில் அமைதியாக இருந்து உங்களோடு பேசுங்கள். உடற்பயிற்சி, உணவுபோன்றன பௌதீக சக்தியை வழங்குகின்றன. சரியான உணவு உண்ணும் பழக்கத்தைப் பேண வேண்டும். காலையில் அதிக நார்ப்பொருட்கள் உள்ள தாவர உணவு, புதிய பழங்கள் போன்றவற்றை உண்ணலாம். பகல் உணவு அதிக புரதம் கொண்டதாக இருக்க வேண்டும். இரவு உணவு பாரம் இல்லாததாக அமைவது நல்லது. சூப், மரக்கறி போன்ற இலேசான உணவை இரவில் உண்பது நல்லது. இரவில் சோறு, பருப்பு, இனிப்பு வகை உண்பது நல்லது அல்ல.

இரவு உணவை நித்திரைக்குச் செல்வதற்கு 2 அல்லது 3 மணித்தியாலங்களுக்கு முன்னதாக, கிட்டத்தட்ட மலை 7 - 7.30 மணி அளவில் எடுப்பது நல்லது. இரவு 10 மணியளவில் நித்திரைக்குச் செல்ல வேண்டும். 10 தொடக்கம் 12 மணியளவில் ஒரு சக்கர நித்திரை முடிந்திருக்க வேண்டும். முதல் சக்கர நித்திரையே அதிகளவு ஓய்வை அளிக்கின்றது. அது ஆழ் நித்திரையாக அமைகின்றது. நடு இரவு 12 மணி தொடக்கம் காலை 2 மணி வரையான இரண்டாவது சக்கர நித்திரையின் போது 50வீத ஆழ்நித்திரையும் 50 வீத கனவுகளும் ஏற்படுகின்றது. காலை 2 மணியில் இருந்து 4 மணிவரையிலான மூன்றாவது சக்கர நித்திரையின் போது 60 வீத கனவும், 40 வீத ஆழ்நித்திரையும் ஏற்படுகின்றது. ஆனால் காலை 4.00மணியில் இருந்து 6.00மணிவரை 4வது சக்கர நித்திரையைக் கொண்டீர்கள் என்றால் அதன் போது 80 வீத எதிர்மறையான கனவுகளையும் 20 வீத நித்திரையையும் கொண்டதாக அது அமைகின்றது. ஆகவே நித்திரையில் இருந்து விழிக்கும் போது நான் அந்த மோசமான கனவைக் கண்டேன் என்ற எதிர் மறையான எண்ணத்தோடு உணர்வோடு பதட்டமாகவே எழும்புவீர்கள்.



25 வயதுக்கு மேலானவர்களுக்கு 6 மணித்தியால நித்திரை போதுமானதாக இருக்கின்றது. 8 மணித்தியாலயங்கள் நித்திரை கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆன்மீகசக்தி, மனோ சக்தி, பௌதீக சக்தியாகிய இந்த மூன்று சக்திகளும் ஒத்திசைந்து செயற்படும் போது என்றும் ஆரோக்கியமான, செழிப்பான, சந்தோஷமான மனதும், வாழ்க்கையும் கிடைக்கின்றன.

இராஜயோகமானது ஆன்மீக சக்திகளின் மூலாதாரமாக இருக்கின்ற சர்வசக்திவானுடன் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் இந்த மூன்று சக்திகளையும் ஒத்திசையச் செய்கின்ற விஞ்ஞானமாக, கலையாக இருக்கின்றது. இதன் மூலம் என்றும் ஆரோக்கியமான, செழிப்பான, சந்தோஷமான வாழ்க்கையை அனுபவம் செய்யலாம்.

*(முற்றும்)*

---

## விதவைப் பெண்களுக்கு சுழற்சி முறைக்கடன்

(பொன்னாலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கணவனை இழந்த விதவைப் பெண்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு சுழற்சி முறைக் கடன் வழங்கப்படவுள்ளது.

இக் கடன் வழங்குவதற்கான விபரங்கள் அப்பகுதி கிராம அலுவலர்கள் ஊடாக தற்போது திரட்டப்பட்டு வருகின்றன.

இக் கடனானது வன்செயல்களின் போது கணவன்மாரை இழந்த வறிய குடும்பங்களைச் சேர்நத பெண்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-49)

## முக்கிய மூன்று சட்டமூலங்களை புதிய அரசு சமர்ப்பிக்கும்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பாராளுமன்றில் 3 சட்டமூலங்களை சமர்ப்பிக்கவிருக்கிறது.

மதமாற்ற தடைச்சட்ட மூலம், பிக்குமார்களுக்கான நீதிச்சேவை சட்டமூலம், பௌத்த சாசன சட்ட மூலம் என்பனவே அவையாகும் என புத்தசாசன அமைச்சர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பேசும் போது, பிக்குகளுக்கும் விகாரைகளுக்கும் இடையிலான முரண்பாடுகள், பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு ஒரு விசேட நீதிமன்றம் அமைக்கப்படும். மேலும் 'தம்ம' பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடைகள் வழங்கப்படவிருக்கின்றன.

பௌத்த மதத்திலிருந்து ஏனைய மதங்களுக்கு மாறும் நடவடிக்கைகள் கடந்த நூற்றாண்டுகளில் மலேசியா, இத்தோனேசியா, கொரியா, சீனா போன்ற நாடுகளில் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த நிலை இலங்கையிலும் தற்போது ஏற்பட்டுள்ளதால் இதனைத் தடுத்து நிறுத்த வேண்டியது அவசியம் என்றார். (உ)

## புதிய கட்டடம்

வலி- தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சங்கானை மேற்கு சனசமூக நிலையத்துக்கு புதிய கட்டடம் ஒன்றுக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த திங்கட்கிழமை சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

அடிக்கல்லை வலி-தென் மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் பி.விக்ரர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நாட்டி வைத்தார். இந் நிகழ்வில் பிரதேச சபையின் உளளூராட்சி உதவியாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், கிராமசேவையாளர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் ஆகியோர் கலந்த கொண்டார்கள். (உ-252)

## விசர் நாய் கடித்த எட்டுப் பேர் மரணம்

(சுதுமலை)

கடந்த வாரம் விசர்நாய்க் கடிக்கு இலக்காகி மரணமடைந்தவருடன் சேர்ந்து இந்த வருடம் முதல் 5 மாதங்களில் எட்டுப் பேர் விசர் நாய்கடிக்கு இலக்காகி மரணம் அடைந்துள்ளதாக சுகா தாரத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்தவார இறுதியில் 43 வயதான பச்சிலைப் பள்ளிநபர் ஒருவர் இரு மாதங்களிற்கு முன்னர் நாய்கடித்ததால் நோய் அறிகுறிகள் ஏற்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்.

மேலும் இவ்வருடத்தில் நாய்க் கடியினால் யாழ்.மாவட்டத்தில் மரணமடைந்தோரின் தொகை கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது அதிகரித்துள்ளதாகவும் அத்துடன் நாய் கடித்ததும் உரிய முதலுதவிகளை செய்தபின் ஏற்புத் தடை ஊசியுடன் விலங்கு விசர் நோய் தடுப்பூசியையும் கட்டாயம் ஏற்றிக்கொள்ள வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-252)

## இராணுவப் பேச்சாளர் மீது மோசடிக் குற்றச்சாட்டு

(இராஜகிரிய)

நில உரிமை மாற்றம் தொடர்பில் சட்டவிரோதமாகச் செயற்பட்ட ஒருவருக்கு உதவியுள்ளதாக இலங்கையின் இராணுவப் பேச்சாளர் சுமேதபெரேரா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கொழும்பின் இராஜகிரியவில் உள்ள அகழ்வாராய்ச்சித் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியை உரிமைமாற்றம் செய்ததில் ஏற்பட்ட மோசடிகளுக்கு துணை போயுள்ளதாக சுமேத பெரேரா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இக்காணி உரிமைமாற்றம் தொடர்பில் சட்டவிரோத ஆவணங்களைத் தயாரிப்பதற்கு சட்டத்தரணிகள் சங்க முன்னாள் செயலரின் ஆலோசனையும் பெறப்பட்டிருப்பதாக கொழும்பு மேல் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இராணுவப் பேச்சாளர் சுமேத பெரேரா மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகளை இராணுவ தலைமையகம் எடுக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-4,61)

## சிறுவர் அரங்க ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

செயல் திறன் அரங்க இயக்கம் தயாரித்த குழந்தை ம.சண்முகலிங்கத்தின் சிறுவர் அரங்க நாடகமான 'பஞ்சவர்ண நரியார்' நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு நல்லை நாவலர் மண்டபத்தில் ஆற்றகை செய்யப்படவுள்ளது. (உ)

# இன்று ஒரு தகவல்

## உடற் பயிற்சி

உடலிலும் உள்ளத்திலும் விழிப்போடும் புத்துணர்ச்சியோடும் இருப்பதற்கு ஒவ்வொருநாளும் உயிர்த்துடிப்போடு தேகப்பயிற்சி செய்வது அவசியமாகும்.

நல்ல உடல் நலம் பெற்றவர்களாக நீங்கள் இருப்பீர்களானால் நீங்கள் நாளைச் செலவழிக்கும் போது, சீக்கிரத்தில் களைப் படையாமல் நல்ல மன நிலையோடு காரியங்களை முன்னையதை விடத் திறமையாகச் செய்து புதுமலர்ச்சியோடு காணப் படமுடியும. மேலும் நீங்கள் ஆர்வத்தோடு மகிழ்ச்சி தரும் பொழுது போக்குகளில் ஈடுபடவும் எதிர்பாராத நிகழ்ச்சிகளைத் துணி வோடு சந்திக்கவும்புதிய சக்தியைப் பெற்றவர்களாகக் காணப் படுவீகள்.

எத்தகைய வெளிப்படையான காரணமுமின்றி, களைப் புணர்ச்சியால் தொடர்ந்து பாதிக்கப்படுவீகளானால், அதற்கு ஒரு காரணமுண்டு அது உங்களுடைய தசைகள் தகுந்த முறையில் செயல்படவில்லை என்பதே இதை ஒரு அடையாளமாக நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். உடலிலே உணடாகின்ற விளக்க முடியாத வலிகளும் வேதனைகளும் உடலின் எடைகூடுவதும் அடிக்கடி குறுமூசசெறிதலும உடல சரியான நிலையில் இல்லை என்பதைக காட்டும் மற்ற அடையாளங்களாகும். உடல் பழுதடைந்து கொண்டிருப்பதற்கான இத்தகைய அடையாளங்கள் பொதுவாக 20 வயதிற்கும் 30 வயதிற்குமிடையே ஒரு நபர் மிகச் சிறந்த ஆற்றலோடும் திறனோடும் காணப்பட வேண்டிய அந்த நேரத்திலே வந்து, திரென்று சாய்ந்து விடுகின்றது.

உங்களது உடல் நிலைக்கு ஏற்ற தேகப்பயிற்சிகள் உங்களது களைப்பை விரட்டியடித்து, தசைத் திறனையும் தாங்கும சக்தியையும் அதிகப்படுத்தி அன்றாட அலுவல்களைச் சிறப்பாக முடிக்கத் துணை புரிகின்றன.

பொருட்களைத் தூக்குவதற்கும் ஓரிடத்திலிருந்து வேறு இடத்திறகு எடுத்துச் செல்வதற்கும் தசைகள் உதவுவதோடல்லாமல் நுரையீரல்களுக்குள் காற்றை இழுப்பதற்கும் ஜரணப்பாதையிலே உணவைத் தள்ளுவதற்கும் உதவி செய்கின்றன. மேலும் உபரியாக அழுத்தம் தேவைப்படும் போது இரத்த நாளங்களை இறுக்கி இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்கின்றது. இதயங்கூட தசையாலான ஒரு விசைக் குழாயே. தேகப் பயிற்சி செய்வதினால் உடலின் உள் உறுப்புகள் தொடர்ந்து நன்றாக இயங்க ஆரம்பிக்கின்றன. எனவே இதயம் இரத்த நாளங்கள் தொடர்புடைய வியாதி வராமல் தடுக்கிறது. மேலும் நுரையீரல் சிறப்பான முறையில் இயங்குகின்றது. இரத்த ஓட்டமும் நன்றாக நடைபெற வழிவகுக்கின்றது.

தொடர்ந்து தேகப்பயிற்சி செய்வதினால் ஏற்படும் நன்மைகளை அமெரிக்க மருத்துவ சங்கம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

1.ஒழுங்காக செய்யப்படும் தேகப்பயிற்சி நல்ல வளர்சசிக்கும், தசைகளும் இளம் எலும்புகளும் புதுவளத்தோடு நன்றாக வளருவதற்கும் உதவி செய்கின்றது.

2.உடலைத் தாங்கி நிற்கும் தசைகளை வலுப்படுத்துவதற்கும், உங்களது தோற்றத்தையும் போக்கையும் மேம்படுத்துவதற்கும் தேகப்பயிற்சி உதவுகின்றது.

3.வியாதியின்றி சுகத்தோடிருப்பதற்கும் நோயேற்பட்டாலோ, அல்லது விபத்துக்களில் அகப்பட்டுக்கொண்டாலோ, அதினின்று சீக்கிரம் சுகம் பெற்று தெளிவடைய தேகப்பயிற்சி உதவுகின்றது.

4. உங்களது உடலின் சமநிலையைக் கூட்டி இயல் நயத்தைப் பெருக்கி உடல் அசைவுகளில் ஒழுங்கை ஏற்படுத்தி நேர்த்தி யாகத் தோற்றமளிக்கும்படி செய்கின்றது உடற் பயிற்சி.

5.மனப்பாரத்தைப்போக்கி அமைதியூட்டுகின்றது. உங்களது உடலில் உண்டாகும் எல்லா நோவுகளையும் வேதனைகளை யும் தீர்க்கவல்லதல்ல இந்த தேகப்பயிற்சி. ஆனால் வியாதிகளை எதிர்த்துப்போராடத்தக்கதாகவும் அன்றாட வாழ்க்கையில் சந் திக்கும அலுவல்களை திறமையோடு சாதிக்கவும் உதவுகின்ற ஒரு சிறப்பான வழி முறையாக இந்த உடற்பயிற்சி அமை கின்றது.

*கமலா ஜெகதீசன்*

# உதவி வழங்கும் நாடுகளின் தீர்மானம்

## மண் மீட்புப் போருக்குச் சாதகம்

### திருமலை அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன்

(கொழும்பு)

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயபபாட்டை இன்று சர்வதேச சமூகம் புரிந்துகொண்டுள்ளது. இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதன்போதே உதவி வழங்கப்படும் என்ற தீர்மானத்தை உதவி வழங்கும் நாடுகள எடுத்துள்ளன. இது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாகிறது என விடுத்லைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை அண்ணா மீனவர் முன்னேறறக கழகத்தின் மண்டபத் திறப்புவிழா கடந்த புதன்கிழமை இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எழிலன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில்,

தமிழ்ச் சமுதாயம் ஆரோக்கியமானதாக மாற்றப்பட வேண்டும். நிலத்தை போராடி மீட்பது மட்டும் விடுதலைப போராட்டமல்ல.இது எமது தலைவரின் சிந்தனை. இதற்கு ஏற்ப செயற்பாடுகள் நடை பெறவேண்டும். கிராம அமைப்புக்கள் இதற்காகப் பாடுபட வேண்டும் என்று வலியுறுத்தினார். (உ-121)

# இலஞ்சம் பெறும் சமாதான நீதவான்களின் விபரம் திரட்ட விசேட குழு நியமனம்

(யாழ்ப்பாணம்)

தமது கடமைகளை நிறைவேற்ற பொது மக்களிடம் பணத்தைப் பெறும் சமாதான நீதிவான்களின் செற்பாடுகள் குறித்து ஆராய விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக சமாதான நீதவான்களின் முறைகேடான செயற்பாடுகள் குறித்து நீதி அமைச்சுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழு இலஞ்சம் மற்றும் சலுகைகளுக்காக தமது பதவியின் புனிதத்தன்மையை துஷ்பிரயோகம் செய்யும் சமாதான நீதவான்களைக் கண்டறிந்து அவர்க்ள் மீதான சட்ட நடவடிக்கைகளையும் ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் எடுப்பதனை நோக்காகக் கொண்டு செயற்படும் எனத் தெரியவருகிறது.

இதேவேளை,கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் சமாதான நீதவான் நியமனம் வழங்கப்பட்ட 600பேரது தகைமைகள் தொடர்பாகவும் இக்குழு ஆராய்ந்து தகுதி அற்றவர்களுடைய நியமனங்களை இரத்துச் செய்யவுள்ளது. (உ-4,61)

# இராசி பலன்

**05.06.2004**
**(வைகாசி 23, சனிக்கிழமை)**
**திருதியை பின்னிரவு 3.04 வரை**
**பூராடம் பின்னிரவு 1.37 வரை**
**இராகுகாலம் 8.52-10.22 மணிவரை**
**சுபநேரம் 2.52-4.22 மணிவரை**

**மேடம்**
உடல்சோர்வு, பிரயாணம், பிதா சிந்தை, முயற்சி தாமதம்.

**இடபம்**
உஷ்ண வியாதி, அபகீர்த்தி, அச்சமான நிலை, காரியதாமதம்.

**மிதுனம்**
நல்ல வரவேற்பு, களஸ்திர நன்மை, முயற்சி கைகூடும், உடல் நலம்.

**கடகம்**
அதிகாரம், பிறர் உதவி, செய்தொழில் முன்னேற்றம், சத்துரு ஜெயம்.

**சிங்கம்**
தாழ்ந்த சுபாவம், சிறுவியாதி, காரிய இடையூறு, புதிய திருப்பம்.

**கன்னி**
பகைவர் தொல்லை, காரியதாமதம், ரோக நிலை, மாதா சுகம்.

**துலாம்**
சகோதரர் உதவி, பிரயாணநன்மை, தனலாபம், தொழில் நன்மை.

**விருச்சிகம்**
மனக்கவலை, பணவிரயம், கடும் வார்த்தை, காரிய தாமதம்.

**தனுசு**
தேகநலன், பெரியோர் சந்திப்பு, தொழில் நன்மை, சயனசுகம்.

**மகரம்**
மனக்கிலேசம், சயன சுகக்குறைவு, பிரயாண அலைச்சல், போசன சுகக் குறைவு.

**கும்பம்**
இஷ்டசித்தி, நல்ல மனைவாசம், விருந்துபசாரம், கீர்த்தி.

**மீனம்**
அதிக பிரயாசை, நல்ல செய்தி, சகோதரர் வழி நன்மை, காரிய அனுகூலம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

***வளவன்***

# இலங்கைச் சிறார்களை பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்த முயற்சி

## பிரி.இசைக்கலைஞர் கைது

(கொழும்பு)

இலங்கைச் சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோக முயற்சிகளில் சம்பந்தப்படுத்த முனைந்த பிரிட்டன் இசைக்கலைஞர் ஒருவரை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் கைது செய்து பிரிட்டன் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.வினர்யன் பாணன் (வயது66) என்ற நபரே இவ்வாறு நீதிமன்றில் ஆஜர்ப் படுத்தப்பட்டு குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டவராவார்.

இவர் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் குறித்த அறிக்கை சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நீதிமன்றிலும் பிரிட்டன் பொலிஸாரிடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பொது நிகழ்ச்சிகளில் இசைக்கும் பியானோக்கலைஞரான பாணன்,2ஆண்டுகளுக்கு முன்னர் ஆசியாவுக்கு விஜயம் செய்திருந்தார் எனவும்,

அவ் விஜயத்தின் போது சர்வதேச தகவல் வலைப பின்னலின் சம்பாஷனை அறையொன்றிற்குள் பிரவேசித்து தம்முடன் தொடர்புகொள்ளுமாறு இளைஞர்கள் மற்றும் சிறுவர்களைக் கேட்டிருந்தார் என்றும் குறிப்பிட்டிருந்த சர்வதேச பாதுகாப்பு அதிகாரசபை தொடர்பு கொண்டிருந்த இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோக முயற்சிகளில் சம்பந தப்படுத்த முனைந்தார் எனவும் அதனை தமது அதிகாரிகள் ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளதாகவும் தெரிவிததிருந்தது. (உ-60,10)

# நல்லையில் நாளை இலக்கிய பேரவையின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசளிப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முப 10 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதினத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் தென்னிலங்கையிலிருந்து மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, கவிஞர் மேமன்கவி, படைப்பாளிகளான ஜின்னாஹ் ஷெரிப்தீன், கே.விஜயன், ப.ஆப்டீன், புலோலியூர் ஆ.இரத்தனவேலோன், சுதாராஜ ஆகியோரும் மலைநாட்டிலிருந்து அந்தனி ஜீவா, சாரல் நாடன்,புலோலியூர் க.சதாசிவம், ஞானம், ஆசிரி யர் ஞானசேகரன், பேராசிரியர் சி.சிவசேகரம் ஆகியோரும்,

கிழக்கிலிருந்து எழுத்தாளர் ச.அருளானந்தம், ஓ.கே. குணநாதன், கவிஞர் எஸ்.முத்துமீரன்,எம்.என் அமானுல்லா, ஏ.எஸ்.உபைத்துல்லா ஆகியோரும்,

வன்னியிலிருந்து கவிஞர் அமரதாஸ்,தமிழ்க்கவி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் மூத்த,இளைய படைப்பாளிகள் அனைவரும் கலந்துகொள்ளவிருக்கும் இவ் விழாவில் பரிசளிப்புரையை மூதறிஞர் சிற்பி சரவணபவனும் சிறப்புரையை ஆறு.திருமுருகனும் நிகழ்த்தவுளளனர்.

ஆசியுரையை நல்லை குருமகா சந்நிதானம் வழங்குவார்.தொடர்ந்து பரிசளிப்பும் கௌரவித்தலும் எழுத்தாளர்களுக்கிடையிலான கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது. (உ)

# பாடசாலை ஆசிரியர்கள் மத்தியில் "எயிட்ஸ்" விழிப்புக் கருத்தரங்கு

(சுதுமலை)

யாழ்.மாவட்ட மாணவர்கள் மத்தியில் எயிட்ஸ் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில், ஆசிரியர்களுக்க இருநாள் விசேட கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

ஐந்து கல்வி வலயங்களிலும இருந்து தலா100பேர் வீதம் 500ஆசிரியர்கள் இந்தக் கருத்தரங்கில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரன் மேற்கொண்டு வருகிறார். (உ-252)

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன் - குறள்

# வலம்புரி

## காலம் கடக்கும் சமாதான முயற்சி

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவியேற்ற கையோடு விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சியை ஆரம்பிக்குமாறு நோர்வே அரசுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்த அழைப்பை விடுத்திருந்தார். ஜனாதிபதியின் அழைப்பை ஏற்றுக் கொண்ட நோர்வே நல்லநோக்கோடு மீண்டும் தனது சமாதான முயற்சிகளை மேற்கொண்டது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சியில், விடுதலைப் புலிகளின் முடிந்த முடிபான விடயங்களை நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் தெரிவித்திருந்தார். ஏற்கனவே கையளிக்கப்பட்ட இடைக்கால சபைத் திட்டவரைபில் இருந்து பேச்சுக்களை ஆரம்பித்தல்.

நிரந்தரத் தீர்வு பற்றி பேச்சை முன்னெடுப்பதற்கு முன்னதாக, வடக்குக் கிழக்கில் இடைக்கால சபையை உருவாக்கி, யுத்தத்தினால் பாதிப்படைந்து போன வடக்குக் கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்துதல் ஆகிய விடயங்கள் புலிகள் தரப்பால் முன்வைக்கப்பட்டிருந்தன.

புலிகளால் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஏற்றுக் கொள்வதில் தற்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பின்னடிக்கத் தொடங்கியுள்ளார். ஆட்சியமைத்த கையோடு சமாதானப் பேச்சை ஆரம்பிக்க உதவுமாறு நோர்வேக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதிக்கு, முன்னைய அரசுடன் நடத்திய பேச்சுக்களில் இருந்து தொடங்கவே விடுதலைப் புலிகள் விரும்புவர் என்பதும்,

புதிய அரசிடம் புதியதொரு தீர்வுத்திட்டத்தை புலிகள் முன்வைக்கமாட்டார்கள் என்பதும் தெரியாத விடயமல்ல. அவற்றைத் தெரிந்து கொண்டே சமாதான முயற்சியை முன்னெடுக்க ஜனாதிபதி முன்வந்தார். ஆனால் அவர் கூட்டுச் சேர்ந்துள்ள ஜே.வி.பி. விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட விடயங்களை அரசு ஏற்றுக் கொள்ளக் கூடாதென்பதில் மிகவும் இறுக்கமாகவுள்ளது. இதனால் சமாதான முயற்சியைத் தொடர்வதில் ஜனாதிபதி பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளார்.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட விடயங்களுக்கு சாதகமான முடிபுகளை ஜனாதிபதி தெரிவிக்காததன் காரணமாக நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் தனது சமாதான முயற்சிகளை நிறுத்திவிட்டு நாடு திரும்பியுள்ளார். இருதரப்புச் சந்திப்புக்களும் முன்னேற்றகரமானதாக இருந்ததாக நோர்வேத் தூதுவர் தெரிவித்திருந்த போதிலும், இன்னும் பல தடைகளைத் தாண்ட வேண்டியுள்ளதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமாயின் அதனைத் தீர்மானிக்கும் பொறுப்பு இப்போது அரசின் பக்கமே உள்ளது.

விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை நோர்வேயூடாக ஜனாதிபதியிடம் தெரிவித்துவிட்டனர். அதனை நோர்வேயும் ஜனாதிபதியிடம் கூறிவிட்டது. ஆக, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சைத் தொடர்வதா? அல்லது விடுவதா? என்ற முடிபை எடுக்கும் பொறுப்பு இப்போது அரசிடமேயுள்ளது.

புலிகளுடன் சமாதானப் பேச்சைத் தொடர்வதாக இருந்தால், புலிகளால் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எனினும், அவர் அவ்வாறு ஏற்றுக் கொள்வதற்கு ஜே.வி.பி. ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. எனவே சமாதானப் பேச்சுக்கள் கிடப்பில்விடப்படுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. சமாதானப் பேச்சுக்களைக் காலங்கடத்திக் கொண்டு யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க முடியுமென அரசு கருதுமாக இருந்தால் அது மிகப் பெரும் தவறாகும்.

சமாதானப் பேச்சுக்களுக்கும் யுத்த நிறுத்தத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு. அதாவது, சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படாமல் காலம் கடத்தப்படுமாக இருந்தால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் காலாவதியாகிவிடும். அவ்வாறாயின் மீண்டுமோர் யுத்தம் தொடர்வதற்கு வாய்ப்பாகிவிடும். மீண்டும் யுத்தம் ஏற்படுமாக இருந்தால் அதன் பின்னர் சமாதானத்தை ஏற்படுத்துவது முடியாத காரியம் என்பதையும் அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். வெறும் புகழ்ச்சிக்கும் இனவாத வெறிக்கும் இடம் கொடுத்து இந்த நாட்டில் மனித உயர்களைப் பலியெடுக்கும் நடவடிக்கைகளுக்கு அரசியல்வாதிகள் உறுதுணையாக இருக்காமல் நாட்டில் சமாதானத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தப்பாடுபடுவதாக அரசியல்வாதிகளின் சிந்தனையும், கருத்தும் அமைதல் வேண்டும்.

## ஒலுவில் துறைமுக அபிவிருத்திக்கென
# சுவீகரிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் நஷ்டஈடுகோரி ஆர்ப்பாட்டப் பேரணி

(ஒலுவில்)

ஒலுவில் துறைமுக அபிவிருத்திக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் நஷ்டஈடுகோரி ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றில் நேற்று ஈடுபட்டனர்.

பாலமுனை உதுமா புரத்தில் ஆரம்பமான இவ் ஆர்ப்பாட்டப் பேரணி ஒலுவிலில் உள்ள துறைமுக அபிவிருத்தி அதிகார சபை அலுவலகம் வரை சென்று முடிவடைந்தது.

வர்த்தமானி அறிவித்தல் மூலம் சுவீகரிக்கப்பட்ட இக காணிகளுக்குரிய நட்டஈடு வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தை நடத்திய பாதிக்கப்பட்ட மக்கள் தமது கோரிக்கைகளை நிறைவேற்ற தவறும் பட்சத்தில் தமது காணிகளை மீளத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

பொதுத் தேர்தல் தினம் அறிவிக்கப்பட்ட பின்னர், கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மேற்படி காணிச் சுவீகரிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடுகளை வழங்குவதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியிருந்தது.

எனினும் தேர்தல் முடியும் வரை இதற்கான நஷ்டஈட்டினை வழங்க முடியாது என ஜனாதிபதி அனுமதி மறுத்திருந்ததால், இவர்களுக்கு கிடைக்கவிருந்த 540 மில்லியன் ரூபா நஷட ஈடுகள் கிடைக்காது போனமை குறிப்பிடத்தக்கது.

(உ-4,6)

# டெங்கு நோயை ஒழிக்கும் செயற்திட்டம் நடைமுறை

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் வேகமாகப் பரவிவரும் டெங்கு நோயை ஒழிக்கும் வகையிலான செயற்திட்டமொன்றை மாகாண சபைகள் அமைச்சு தற்போது ஆரம்பித்துள்ளது.

மேற்படி நோயைக்கட்டுப்படுத்தி அதனை முற்றாக ஒழிக கும் இத் திட்டத்தினை சுகாதார அமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஆகியனவும் ஒன்றிணைந்து முன்னெடுக்கவுள்ளன.

இதனடிப்படையில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய இடங்களைத் தேடிக் கண்டுபிடித்து மருந்துகளை விசிறும் நடவடிக்கைகளும் பிரசாரப் பணிகளும் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பான சகல விபரங்களும் உளளூராட்சி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன், இத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கைகள் முதற்கட்டமாக தம்புள்ள தேர்தல் தொகுதியில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துள்ளார். (உ-18,60)

## நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 7ஆம்,8ஆம் திகதிகளில் நடாத்தப்படவுள்ளன.

இதற்கான அனுமதிக் கடிதங்கள் விண்ணப்பதாரிகளுக்கு தபாலில் இடப்பட்டுள்ளதெனவும் இதற்கான அறிவித்தல் கிடைக்காத விண்ணப்பதாரிகள் உடன் தொடர்புகொள்ளுமாறும் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (உ)

## வீட்டுப்பிணக்குகள் தொடர்பில்
# பெண்கள் நீதிமன்றில் முறையிட வாய்ப்பு

(கொழும்பு)

கணனி மற்றும் வீட்டுப்பிணக்குகள் தொடர்பான குற்றங்களில் ஈடுபடுவோருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான புதிய சட்ட மூலம் ஒன்றை கொண்டு வருவதற்கு அரசு ஆலோசனை நடத்திவருகிறது.

இதற்கான இரு சட்ட மூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நீதி அமைச்சர் ஜோன் செனிவிரட்ன தெரிவித்தார்.

இச்சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டால் வீட்டுப் பிணக்குகள் சம்பந்தமாக பெண்கள் நீதிமன்றத்தில் முறையிட்டு தீர்ப்பினைப் பெற்றுக்கொள்ளலாம். பெண்களின் நன்மையை கருத்தில் கொண்டே ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களுக்கான சாசனத்தின் பிரகாரம் இச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என நீதி அமைச்சர் ஜோன் செனிவிரட்ன மேலும் தெரிவித்தார்.

(உ-4,61)

## ஓம் தினசரி தியானம்
### விவேகச் சிந்தனைகள்

பல மதங்களில் விலை உயர்ந்த கனவு இந்த உலகம் தான். நோயோ வறுமையோ துன்பங்களோ இல்லாத ஒரு காலத்தைப் பற்றி மக்களுள் பெரும்பான்மையினர் கனவு கண்டு கொண்டிருக்கின்றனர். அப்போது எங்கும் நன்மை மட்டும் தான் இருக்குமாம்.

சுவாமி விவேகானந்தர்

# புலிகள் தொடர்பில் இந்தியா கருத்துக் கூறவில்லை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பான எந்தவித கருத்துக்களையும் தனது விஜயத்தின் போது இந்தியா வெளியிடவில்லை என சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

ரஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பான கருத்துக் களை இந்தியா வெளியிட்டதா? என கடந்த திங்கட்கிழமை இரவு இடமபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், செய்தி யாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே கதிர்காமர் இதனைக் கூறியுள்ளார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வார்சிங் ஆகியோரை தான் சந்தித்து கலந்துரையாடியதாகத் தெரிவித்துள்ள லஷ்மன கதிர்காமர், ரஜீவ் காந்தியின படுகொலை தொடர்பாக இந்தியத் தலைவர் தம்மிடம் எதுவிதக் கருத்துக்களையும் வெளிப்படுத்தவில்லை எனவும் கூறியுள்ளார்.

(உ)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தார் உற்பத்தியை ஆரம்பிக்கும்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தார் மற்றும் மெழுகு உற்பத்தியை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

பெற்றோல் சுத்திகரிப்பு நிலையங்களில் இந்த இரு பொருட்களும் உப உற்பத்திப் பொருட்களாக உற்பத்தி செய்யப்பட்டு வந்தபோதிலும், அண்மைக் காலமாக இந்த நடவடிக்கைகள் அனைத்தும் கைவிடப்பட்டிருந்தன.

எனினும், இவ் உற்பத்தியை மீள ஆரம்பிப்பதற்கு ஏற்ற வகையில் தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இது விடயம் குறித்து சக்தி வலுத்துறை அமைச்சர் சுசில பிறேம் ஜெயந்த் கருத்துத் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் அனைத்து இடங்களிலும் மேற்கொள்ளப்படும் வீதி அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான தார் முழுவதையும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்கவுள்ளது.

இதற்கமைவாகவே, கைவிடப்பட்டிருந்த இவ் உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

(உ-18,60)

# வவு.வளாக மாணவர்கள் மீண்டும் வகுப்புப் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் வவுனியா வளாக மாணவர்கள் மீணடும் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா வளாகத்தில் தமக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரி இந்த மாணவர்கள் அண்மையில் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

மாணவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதில் வளாக நிர்வாகம் தொடர்ந்தும் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிபதாலேயே இந்த மாணவர்கள் மீண்டும் நேற்று முதல் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியா கல்வியியல் கல்லூரியில் இருந்து வெளியேறிய சிங்கள மாணவர்களில் 75சதவீத மாணவர்கள் நேற்றுமுன்தினம் பெற்றோர் சகிதம் கல்லூரிக்கு சமுகமளித்துள்ளனர்.

ஏனையோர் நேற்று வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

தமக்கு பாதுகாப்பு இல்லையென தெரிவித்து சுமார் 158 சிங்கள ஆசிரிய மாணவர்கள் கடந்த வாரம் கல்லூரியில் இருந்து வெளியேறியிருந்தமை தெரிந்ததே. (உ-121)

## போலிச் செயலகம் முற்றுகை

(மருதானை)

கொழும்பு மருதானையில் உள்ள முகைதீன் மஜீத் அவனியூவல் போலி முத்திரைகள் தயரிப்பு நிலையம் ஒன்றை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

இவ்வாறு முற்றுகையிடப்பட்ட போலி முத்திரைகள் தயாரிப்பு நிலையத்திலிருந்து மருதானை, கிண்ணியா ,பொலநறுவை ஆகிய பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் காணிப்பதிவாளர்கள், கொழும்பு மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளின் போலி இறப்பர் முத்திரைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

அததுடன், போலிக் கடவுச்சீட்டு, ஆள அடையாள அட்டை ஆணை[illegible]ார்கள் ஆகியோரது போலிக் கையெழுத்து முத்திரை மற்றும் போலி இறப்பர் முத்திரைகள் உட்பட போலி ஆவணத் தயாரிப்புகளுக்கு பயன்படக்கூடிய முத்திரைகள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சட்டவிரோத ஆவணத் தயாரிப்புகளுக்கு பயன்படக்கூடிய இம் முத்திரைகளை தயாரித்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

(உ-4,61)

# இராஜிநாமாக் கடிதத்தில் என்னை பலவந்தமாக ஒப்பமிடச் செய்தனர்

## ஹெல உறுமயவின் முன்னாள் எம்.பி.நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

அண்மையில் ஹெல உறுமயவைச் சேர்ந்த பிக்கு ஒருவர் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட சம்பவம் தற்போது புதிய திருப்புமுனையை எட்டியுள்ளது. மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய சர்ச்சைக்குரிய பிக்கு வண.ஹத்தலுவே ரத்னசீல தேரர் தான் கடத்தப்பட்டது உண்மை என்றும், பாராளுமன்றில் இருந்து இராஜிநாமாச் செய்வதற்கு தான் நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் கொழும்பு நீதிமன்றில் வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்துள்ளார்.

வழக்கில் பிரதி வாதிகளாக வண.ஒலம்பே சோபித தேரர், வண. கொலன்னாவே சுமங்கல தேரர், வண.உடுவே தம்மலோகதேரர், வண.அக்மீமன தயாரத்தின தேரர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தன்னுடைய இடத்திற்கு வண. அக்மீமன தயாரத்தின தேரரை நியமிப்பதற்கு ஹெல உறுமய எடுத்த நடவடிக்கை சட்டத்திற்குப் புறமபானது. தனது இராஜிநாமா நிர்பந்தத்தால் மேற்கொள்ளப்பட்டது என ரத்தின சீல தேரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த ஏப்ரல் மாதம் 22ல் சபாநாயகர் தெரிவில் நானும் வண.அபரேக பஞ்ஞானந்த தேரரும் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தோம். இதன்பின்னரே நான் இராஜிநாமாச் செய்ய வேண்டுமென ஹெல உறுமயத் தலைவர்கள் எனக்கு அழுத்தம் கொடுத்து வந்தனர்.

கடந்த மே.12அன்று ஓலம்பே தேரர், கொலன்னாவே தேரர், தம்மலோக தேரர் உட்பட மேலும் ஹெல உறுமயப் பிக்குகள் மொரட்டுவவில் உள்ள எனது விகாரைக்கு வந்திருந்ததுடன் என்னைக் கூட்டிக் கொண்டு நாரஹேன் பிட்டியில் உள்ள தலைமையகத்திற்குச் சென்றனர். அங்கு என்னை பாராளுமன்றத்தில் இருந்து இராஜிநாமாச் செய்யும் கடிதத்தில் பலவந்தமாக ஒப்பமிடச் செய்தனர். இந்த இரகசியங்களை வெளியில் கூறினால் தான் கிரனைட் ஒன்றின் மூலம் தற்கொலை செய்துவிடுவேன் எனத் தேரர் ஒருவர் அச்சுறுத்தினார். பின்னர் பலவந்தமாக சபாநாயகர் அலுவலகத்திற்குக் கொண்டு சென்று இராஜிநாமாக் கடிதத்தைச் சமர்ப்பிக்கும் படி கூறினர். இவ்வாறு தனது மனுவில் ரத்தின சீல தேரர் கூறியுள்ளார். (த-6)

# கணவனைக் கொலை செய்தபின் உடலைச் சமைத்து உண்ட மனைவி

## நேபாளத்தில் சம்பவம்

(நேபாளம்)

கணவனைக் கொலைசெய்து அவரின் உடற்பாகங்களைச் சமைத்துண்ட மனைவி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தென் கிழக்கு நேபாளத்தில உள்ள மொறாங் மாவட்டத்தில் அமைந்திருக்கும் மிருகலியா கிராமத்தில் இச் சம்பவம் இடம் பெற்றது. சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

நேபாள அரச உணவு நிறுவனத்தில் பணியாற்றும் கோபி கிருஷ்ணா(வயது48) என்ற தனது கணவரையே இந்திராணி என்ற அவரது மனைவி கொலை செய்த பின் கண்ட துண்டமாக வெட்டிச் சமைத்துச் சாப்பிட்டுள்ளார்.

இத்தம்பதியரது ஆறு பிள்ளைகளும் தமது தாய் தந்தையரை மூன்று நாட்களாகக் காணவில்லையெனவும் தமது வீட்டுச் சமயலறையினுள் துர்நாற்றம் வீசுவதாகவும் பொலிஸாரிடம் முறையிட்டதையடுத்துப் பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை அவர்களது வீட்டுக்குச் சென்று அவர்களது சமையலறையின் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த போது இந்திராணி தனது கணவரான கோபிகிருஷ்ணாவின் தலையை பாத்திரமொன்றில் போட்டு அவித்துக் கொண்டிருந்தார். இதனையடுத்து இந்திராணியைக் கைது செய்த பொலிஸார் அவர் மீது விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் கடந்த 25ஆம் திகதி உறக்கத்தில இருந்த தனத கணவரைக் கொலை செய்த பின் அவரது உடலலை மறைத்து வைத்துவிட்டு நாளாந்தம் அவரது உடலின் ஒவ்வொரு பாகங்களையும் சமைத்துண்பதாக அவர் தெரிவித்தார்.

இவரைப் பொலிஸார் கைது செய்த போது பருகுவதற்குத் தயாரான நிலையில் வைக்கப்பட்டிருந்த அவரது கணவரின் இரத்தம் சேகரித்து வைக்கப்பட்டிருந்த குவளை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தால் நேபாளம் முழுவதிலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ச-4,61)

# சாட்சியாக அழைக்குமாறு ராஜபக்ஷ கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக் குட்பட்ட அரியாலை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் காணாமல் போன தமிழ் இளைஞர், யுவதிகள் தொடர்பான ஆட்கொணர்வு மனுமதான விசாரணைகளில் தன்னை சாட்சியாக அறிவிக்குமாறு மரண தண்டனை விதிக்கப்பட்ட படைச் சிப்பாய் ராஜபக்ஷ கோரியுள்ளார்.

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியான கிரிசாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்தமை மற்றும் அவரது தாயார், சகோதரன் அயலவர் ஒருவர் ஆகியோரைப் படுகொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த இவருக்கு நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து சக உயர் அதிகாரிகளின் பணிப்பின் பேரில் தம்மால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய கொலைகள் சம்பந்தமான தகவல்களை வெளியிட்டிருந்ததுடன் சடலங்கள் புதைக்கப்பட்டிருந்த இடங்கள் சிலவற்றையும் அவர் அடையாம் காட்டியிருந்தார்.

இதேவேளை 1996, 1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணமல் போன 42 தமிழ் இளைஞர் யுவதிகளின் சார்பில் அவர்களது பெற்றோரால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுக்கள் இவ்வாண்டு முற்பகுதியில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன அவ்வாறு தாக்கல் செய்யப்பட்டிருந்த 12 ஆட்கொணர்வு மனுக்கள் அரியாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இடம் பெற்றிருந்த கைதுகளை முன்னிட்டே தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அவ்வாறு தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்களில் முதலாம் எதிராய ராஜபக்ஷ குறிப்பிடப்பட்டுள்ளார்.

இதனிடையே இவ்ஆட்கொணர்வு மனுமீதான விசாரணைகளில் ஆஜராகுமாறு தென்னிலங்கை சிறைச்சாலை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ராஜபக்ஷவுக்கு நீதிமன்றம் அண்மையில் அழைப்பாணை அனுப்பியிருந்தது.

இந் நிலையில் சட்டத்தரணி ஒருவர் ஊடாக இந்த ஆட்கொணர்வு மனுமதான விசாரணையில் தம்மைச் சாட்சியாத அழைக்குமாறு ராஜபக்ஷ தற்போது கோரிக்கை விடுத்துள்ளார். (த-121)

# விளானை ச.ச.நி. ஆண்டு விழா

(காரைநகர்)

காரைநகர் விளானை சனசமூக நிலைய 21ஆவது வருட நிறைவுப் பூர்த்தி விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலைய முன்றலில் தலைவர் மு.சு. கந்தையா தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும், கௌரவ விருந்தினர்களாக ஊர் காவற்துறையின் பிரதேச சபையின் செயலாளர் கு.கணேசலிங்கம், பிரதி உள்நாட்டு உதவி ஆணையாளர் க.இராசையா, பாலாவோடை முத்துமாரி அம்மன் பிரதம குரு சிவஸ்ரீ கு.சண்முகராஜாக் குருக்கள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாகக் காரைநகர் அரசியல் துறைப் பொறுப்பாளர் நா.கானகன், யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் யோ.கலைவிழி, விளானை சனசமூக நிலைய லண்டன் கிளை நிர்வாகப் பிரதிநிதி ஆ.சி.சிறிஸ்கந்தராசா ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

இதேவேளை நிலையத்தின் முன்னாள் தலைவர் ஆ.சிற்றம்பலம், சித்தாந்த வித்தகர் வே.நடராசா ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.(உ-246)

# கைதான இலங்கை மீனவர் விரைவில் விடுதலையாவர்

(கொழும்பு)

இந்தியக் கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களை இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை 3 படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் இந்திய கடற்பகுதிக்குள் இழுத்துச் செல்லப்பட்டு இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை விடுதலை செய்யுமாறு இந்தியத் தூதுவரின் ஊடாக இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டு கோளின் பலனாக விடுதலை செய்யப்படவுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் தமிழ் நாடு மண்டப முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பெரும்பாலும் இன்று அல்லது நாளை இலங்கைக் கடற்படையினரிடம் அவர்கள் ஒப்படைக்கப் பட இருப்பதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (த-121)

# யாழ்.அமைப்பாளருக்கு ஜனாதிபதி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அழைப்பின் பேரில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட இணைச் செயலாளர் ரி.தேவகுலநாயகம் தலைமையில் உறுப்பினர்கள் குழுவொன்று நேற்று கொழும்பு சென்றுள்ளது.

கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் வேல்முருகு தங்கராசாவின் பெயர் தேசியப் பட்டியலில் இருந்தும் இதுவரை பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் எதுவும் வழங்கப்படாமை குறித்து ஜனாதிபதியுடன் விரிவாகக் கலந்துரையாடுவதே இப்பயணத்தின் நோக்கமாகும்.

அத்துடன் வேலை வாய்ப்பு உட்பட குடாநாட்டின் ஏனைய விடயங்கள் குறித்தும் இச் சந்திப்பின்போது விரிவாகப் பேசப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-18)

## குடும்பத்...

படுகாயப்படுத்தியதுடன் மாமியாரையும் வாளால் வெட்டியுள்ளார்.

இவ்வளவில் நின்றுவிடாத கொலைஞர் தன்னைத்தானே வாளால் வெட்டியும் காயப்படுத்தியுமுள்ளார். படுகாயங்களுக்கு ஆளான கணவனும் மனைவியும் யாழ்.போதனா வைத்தியசாலையிலும், மாமியாரான ரஞ்சிதம் (வயது53) மந்திகை மருத்துவ மனையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குழந்தையின் சடலம் மந்திகை மருத்துவ மனையில் பிரேதப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (உ-150,52,19)

## இ.தொ.கவின்...

தேர்தல் முறை ஆகியன நீக்கப்படக் கூடாதென்றும், கொத்மலை நீர் மின் உற்பத்தித்திட்டம் கைவிடப்பட வேண்டுமென்றும் மேலும் இரு கோரிக்கைகளையும் இ.தொ.க முன்வைத்துள்ளது.

ஆனால், இவை அரசின் கொள்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் ஜனாதிபதி இதனை நிராகரித்துள்ளார் எனப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அமைச்சுக் கோரிக்கைக்கு ஜனாதிபதி இணங்கவில்லை ஏனெனில் இதற்காக அமைச்சரவையில் பாரிய மாற்றங்களைச் செய்ய வேண்டி ஏற்படுமென்பதாலாகும்.

இதேவேளை, பெரும்பான்மையை அரசாங்கம் எவ்வாறு பெறப்பேகிறது எனத் தெரியாவிடினும் அரசாங்கத்துடன் இணைவதில் இ.தொ.கவின் பல உறுப்பினர்கள் ஆர்வமாகஉள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.(த-6)

## அன்புச்சோலை...

தேசியத் தலைவர் தனது துணைவியாருடன் கலந்து கொண்டு மூதாளர்களுடன் கலந்துரையாடியதோடு அவர்களுக்கு அன்புப் பரிசில்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் கடற்புலிகளின் விசேட தளபதி கேணல் சூசை, விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன், அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் உட்பட பல பொறுப்பாளர்கள், போராளிகள், கலந்து கொண்டனர்.

தாயக மீட்புப் போரிலே தமது இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களின் பெற்றோர்கள் அன்புச் சோலையில் பராமரிக்கப்பட்டு வருகினறமை குறிப்பிடத்தக்கது.(ந)

## கழுத்து...

கொண்டார்.கொலையுண்டவரின் மனைவி சங்கீதா சடலத்தை அடையாளம் காட்டினார்.

நெல்லியடி பொலிஸ் சப் இன்ஸ்பெக்ரர் புஞ்சிஸ்ரீ தலைமையிலான பொலிஸார் கொலை குறித்த மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

மரணமானவரின் மனைவி வாக்குமூலமளிக்கையில் வழமை போன்று தனது கணவர் நேற்று முன்தினம் 5 மணியளவில் விளையாடுவதற்காக வெளியில் சென்றவர் இரவு முழுவதும் வீடுதிரும்பவில்லையெனவும், நேற்றுக் காலை மரணமான நிலையில் சடலமாகக் காணப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

சடலம் பிரேதப் பரிசோதனைக்காக மந்திகை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.(உ-52,150)

## நிவாரணத்தில்...

ஒரு போதும் அங்கீகரிக்க முடியாது.

பொறுப்பற்ற அரசின் இச் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதனால் மக்கள் பட்டினிச் சாவை எதிர் கொண்டுள்ளனர். பட்டினிச்சாவை எதிர் கொள்ளும் மக்களின் மனிதாபிமான போராட்டத்திற்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள பல்வேறு பொது அமைப்புக்களும் உத முன்வந்துள்ளன. எனவே இது விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட வேண்டும். இல்லையேல் தொடர் போராட்டங்கள் இடம் பெறுவது தவிர்க்க முடியாதது.இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க் கட்சித் தலைவர், யூ.என்.எச்.சி.ஆர்., யாழ். அரச அதிபர், தமிழீழ விடுதலைப் புலிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (த)

# ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று அம்பாறைக்கு விஜயம்

(அம்பாறை)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று அம்பாறை மாவட்டத்திற்கான உத்தியோக பூர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

அம்பாறை தீகவாவிப் பகுதியில் அமைந்துள்ள முஸ்லிம் காங்கிரஸின் முன்னாளர் தலைவர் அஸ்ரப்பின் ஞாபகார்த்த மண்டபத்தினை ஜனாதிபதி திறந்து வைத்தார்.

இதன் திறப்பு விழா வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி;

தனது சொந்த நலன்களுக்காக மத்தை, இனத்தை எவரும் பயன்படுத்தக் கூடாது. சமூக விடுதலைக்காப் போராடிக் கொண்டு வருகின்றோம் எனக் கூறிக் கொண்டு பல குழுக்கள் மக்களைக் கவர்ந்துள்ளன.

இப்படியான குழுக்கள் தற்சமயம் அந்த நடவடிக்கைகளில் இருந்து தம்மை விலக்கிக் கொண்டுள்ளமை திருப்தியளிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபம் 70 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (த-121)


**SRI LANKA RED CROSS SOCIETY**

**Health and psychosocial Programme-Jaffna District**

**We hereby regret to inform you, that due to changes in the programme structure, we will not be calling for interviews on the advertised post as Secretary advertised in the news paper on the 21 st of April 2004.**

*We apologise for your inconvenience*

Director General
C/O Chairman
Sri Lanka Red Cross Society
Jaffna District.


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.